# அரசு ஊழியர்

ஏப்ரல் 2019

மலர் : 40 இதழ் : 4

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக
அச்சிட்டு வெளியிடுபவர் : மு.அன்பரசு

ஆசிரியர் : மு.சுப்பிரமணியன்

ஆசிரியர் குழு

மு.அன்பரசு, எம்.தங்கராஜ், ந.குமாரவேல்,
மொ.ஞானத்தம்பி, இரா.பன்னீர்செல்வம்,
எஸ்.தமிழ்ச்செல்வி, என்.ஜனார்த்தனன், தி.கலைசெல்வி

முகவரி : பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
e-mail : arasuoozhiyar@gmail.com

*அச்சகம்: சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,
19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு,
எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை, சென்னை - 600 002.*

*ஆண்டுச் சந்தா : ரூ. 80 தனி இதழ் ரூ. 8*


## சூடா ஒரு கோப்பை சூப்

## நாட்டை மாற்றிக்காட்ட வல்லது!

ஒரு சூரிய ஒளிக்கற்றை அறையை
பிரகாசமாக்குவது சாத்தியமாயின்,
ஒரு மெழுகுவர்த்தி இருட்டை
துடைத்தெறிவது சாத்தியமாயின்,
ஒரு பாடல் ஒரு பொறியைத்
தூண்டுவதும்,
ஒரு கைதட்டல் உள்ளத்தை
உயர்த்துவதும்,
ஒரு நட்சத்திரம் கப்பலுக்கு
வழிகாட்டுவதும் சாத்தியமே!

இவை போலவே
ஒரு வார்த்தை
ஒரு லட்சியத்தை
உருவாக்க வல்லது
ஒரு வாக்கு நாட்டை
மாற்றிக்காட்ட வல்லது
ஆதலினால்
''வாக்களிப்போம்''
மறவாமல்!

# வாக்கு - விலை போகக் கூடாது... வீணாகவும் கூடாது...

*புதிய பென்சன் திட்டத்தை ரத்து செய்!*

*பொதுத்துறை பாதுகாப்பு!*

*காலிப் பணியிடங்களை நிரப்பு!*

*தொகுப்பு மற்றும் மதிப்பூதியத்தை ஒழித்திடுக!*

இந்திய மக்கள் ஒரு பெரும் ஜனநாயகக் கடமையினை நிறைவேற்றுவதற்காக காத்திருக்கிறார்கள். ஆம் ஏப்ரல் 18 அன்று 17வது நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு தமிழகத்தில் நடந்தேறவுள்ளது. இது மத்திய ஆட்சியின் கடந்த ஐந்தாண்டு செயல்பாடு குறித்து மக்களின் முக்கியமான வாக்குரிமை என்ற உளியால் தங்களுக்கான எதிர்காலத்தை செதுக்குகிற மக்களின் அரசியல் நடவடிக்கை இது.

இந்திய நாட்டில் முதன்முறையாக மத்திய தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து ஒரு கோரிக்கை சாசனத்தை அரசியல் கட்சிகளின் பரிசீலனைக்காக சமர்ப்பித்துள்ளனர். பொதுத்துறை பாதுகாப்பு, குறைந்தபட்ச ஊதியம், வரையறுக்கப்பட்ட பயன் உடைய ஓய்வூதியம், உழைப்பாளி மக்களின் சமூகப் பாதுகாப்பு, கிராமப்புற மக்களின் வாழ்வாதாரம், தொழிற்சங்க உரிமைகள் ஆகியன அதில் இடம் பெற்றுள்ளன. பொருளாதார நலன் சார்ந்ததாக மட்டுமானதாவோ பேசவில்லை. மாறாக தேசத்தின் பொருளாதாரப் பாதையால் வஞ்சிக்கப்பட்டவர்களின் ஒருமித்த குரலாய் ஓங்கி ஒலிக்கிறது.

இது கட்சி சார்ந்த அரசியல் அல்ல. உழைப்பாளிகளின் நலன் சார்ந்த அரசியல், அரசு வங்கிகள், பிஎஸ்என்எல், எல்ஐசி, அரசு பொது இன்சூரன்ஸ் நிறுவனங்கள் சந்திக்கிற சவால்களின் வேர்கள் அத்துறைக்குள்ளேயே முளை விட்டவையா? மத்திய மாநில அரசு ஊழியர்களும், ரயில்வே ஊழியர்களும், ஆசிரியர்களும், பொதுத்துறை நிறுவன ஊழியர்களும் எதிர்த்து களம் கண்ட வருகிற புதிய ஓய்வூதியத் திட்டத்தின் வேர்கள் வெறும் பொருளாதாரப் பயன்களை மட்டுமே சார்ந்ததா? இந்திய மருத்துவத் துறை தாக்கப்படுவதும், லட்சக்கணக்கான மருத்துவப் பிரதிநிதிகளின் வாழ்வுரிமை பறிபோவதும் அவர்கள் மீதான தனித்த தாக்குதலா? இப்படி கேள்விகளை எழுப்பிக் கொண்டே போகலாம். விடை ஒன்றுதான். எல்லோருமே அரசின்

பொருளாதாரப் பாதையால் பாரபட்சத்திற்கும், பறிப்பிற்கும் ஆளாகுபவர்களே.

ஐந்தாண்டு கணக்குகள் நம் முன்னால் உள்ளன. 1993-லிருந்து பொதுத்துறை வேட்டையாடப் படுகிறது. இதுவரையிலும் 3,66,000 கோடி ரூபாய் பங்குகள் விற்கப்பட்டுள்ளன. இதில் 2,10,000 கோடி ரூபாய் பங்குகள் கடந்த ஐந்தாண்டுகளில் மட்டுமே விற்கப்பட்டுள்ளன. 20 ஆண்டுகளாக விற்கப்பட்டதைவிட கடந்த ஐந்தாண்டுகளில் விற்கப்பட்ட தொகை அதிகம் என்றால் என்ன அர்த்தம்? இது வெறும் புள்ளி விவரம் அல்ல. தனியார்மயத்திற்கான மூர்க்கத்தின் வெளிப்பாடு. இப்படி விரிக்கப்பட்ட அசுர வலைகள்தான் அரசு பொது இன்சூரன்ஸ் பங்குகள் இழுக்கப்பட்டன. நான்கு அரசு பொது இன்சூரன்ஸ் நிறுவனங்களில் எது அதிக சந்தைப் பங்கைக் கொண்டதோ, அதிக பிரிமிய வருவாய் கொண்டதோ, அந்த நியூ இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனம் முதல் இலக்காக மாற்றப்பட்டது. ரயில்வே போன்ற துறைகளும் தனியாருக்கு வழங்குவதற்காக முனைப்போடும் உள்ளன. அடிக் கரும்பு தனியாருக்கு நுனிக்கரும்பு அரசு நிறுவனங்களுக்கு என்ற தனியார்மய உத்திக்கு வேறு சாட்சியம் வேண்டுமோ?

ஒரு காலத்தில் அரசு நிறுவனங்களை, அரசுத் துறைகளை "மாதிரி வேலைக்கமர்த்துவம்" என்று அழைப்பார்கள். தொழிலாளர்கள், ஊழியர் களுக்ககன பொருளாதார பலன்களில் உரிமை களில் அது பிரதிபலிக்கும். ஆனால் உலகமய யுகம் அரசு உடைமைக்கு எதிரானதாக மட்டுமின்றி "மாதிரி" என்கிற கருத்தாக்கத்தையே சிதைத்துள்ளது. இதன் வெளிப்பாடே புதிய பென்சன் திட்ட அமலாக்கத்தில் பார்க்கிறோம். சமூகப் பாதுகாப்பைத் தருவது எங்களது பொறுப்பு அல்ல என அரசு கை கழுவுகிறது. பென்சனுக்கான பங்களிப்பை ஊழியர்களும் தர வேண்டும், நாங்களும் தருவோம், சந்தையில் முதலீடு செய்யப்படும். அதன் மீதான வருவாயைக் கொண்டே பென்சன் பயன் தீர்மானிக்கப்படும். பங்குச் சந்தை முதலீடுகளும் அதில் அடக்கம். இந்த விளையாட்டில் பென்சனுக்கான சேமிப்புகள்கூட பறிபோய் விடலாம். இதுவே அத்திட்டத்தின் சாரம். இது வெளிப்படையாக "தேசிய பென்சன் திட்டத்தின்" இணையதளத்தில் சொல்லப்பட்டுள்ளது. உலகம் முழுவதிலும் சர்வதேச நிதி மூலதனம் நிகழ்த்துகிற சூதாட்டத்தில் ஒரு கை குறைகிறது என பன்னாட்டு மூலதனமும், இந்தியப் பெரு மூலதனமும் உங்களை அழைப்பது செவிகளில் விழவில்லையா?

ஊதிய மறுப்பும் உக்கிரமான வெயில் போல நம்மைத் தாக்குகிறது. வங்கி ஊழியர்கள் ஊதிய உயர்வு கேட்டால் வராக் கடனை காண்பிக் கிறார்கள். மல்லய்யாவின் மோசடிக்கும், வங்கி ஊழியர்களுக்கும் என்ன சம்பந்தம்? ஏழரை லட்சம் வங்கி ஊழியர்களின் ஓராண்டு சம்பளச் செலவுக்கு ஒரே ஒரு தொழிலதிபரின் வராக் கடன் இணையாக இருக்கிறது என்றால் எவ்வளவு பெரிய மோடி? இதற்கு பதில் சொல்ல வேண்டிய அரசாங்கம் ஊழியர்களின் பொருளாதாரக் கோரிக்கையை பலிகடா ஆக்குகிறது. பிஎஸ்என்எல்-இன் "தாங்குகிற சக்திக்கான பிரிவு" ஊழியர்களின் ஊதிய உயர்வுக் கோரிக்கைக்கு எதிராக முன்வைக்கப்படுகிறது. ஆனால் பிஎஸ்என்எல் நிறுவனம் 4ஜி அனுமதி கேட்டால் கைகளை கட்டிப்போடுவது ஏன்? டவர்களுக்கான அனுமதியை தர தாமதிப்பது ஏன்? அரசு இன்சூரன்ஸ் நிறுவனங்களின் ஊதியப் பேச்சு வார்த்தைகளின் முதற்கட்டம் நடைபெறுவதற்கே ஒன்றரை ஆண்டுகள் இழுத்தடிக்கப்பட்டது ஏன்? முதலில் விவசாயிகள்... அப்புறம் அமைப்புசாரா உழைப்பாளிகள்... இப்போது நடுத்தர வர்க்கம் என உலகமயத்தின் "சுடு வளையத்திற்குள்"அரசு பொதுத்துறை ஊழியர்கள் நிறுத்தப்பட்டுள்ளனர்.

அரசின் வரிக் கொள்கையும் நடுத்தர வர்க்கத்திற்கு எதிரானதாக உள்ளது. கார்ப்பரேட் வரிகள் ஐந்தாண்டுகளில் 33 சதவீதத்திலிருந்து 25 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. அம்பானி, அதானிகளுக்கு கொண்டாட்டம்தான். சந்தையை யும் ஏற்படுத்திக் கொடுத்து, சலுகைகளையும் கொடுக்கிறார்கள். ஆனால் ஜிஎஸ்டி வரி ஆயுள் இன்சூரன்ஸ், உடல் நலக் காப்பீடு, வாகன இன்சூரன்ஸ் மீது 18 சதவீதம் விதிக்கப்பட் டுள்ளது. இவர்கள் ஆட்சிக்கு வரும்போது 12 சதவீதமாக மட்டுமே இருந்தது. வங்கிகளில் குறைந்தபட்ச கையிருப்பு இல்லாவிட்டால் தண்டம். அதிகமான முறை உங்கள் வங்கிக் கணக்கில் நடவடிக்கைகள் இருந்தால் அபராதம். நின்னா வரி, நிமிர்ந்தா வரி என சாதாரண மக்கள் குறி வைக்கப்பட்டுள்ளனர்.

அமைப்புசாரா உழைப்பாளிகள், விவசாயிகள் சந்திக்கிற இன்னல்கள் சொல்லில் அடங்காதவை. கிராமப்புறங்களில் ரேகா திட்டம் சீரழிப்பு, கட்டுப்படியாகாத விவசாயம் ஆகியவற்றால்

நகரங்களை நோக்கி அத்துக்கூலிகளாக விரட்டப் பட்ட மக்கள் எந்த சமூகப் பாதுகாப்பும் இல்லாமல் நிர்க்கதியாய் விடப்பட்டுள்ளனர். அமைப்பு சார்ந்த ஊழியர்கள் போராடும் போது அரசாங்கம் இவர்களை அவர்களுக்கு எதிராக இவர்களை முன்னிறுத்துகிறது. 45 ஆண்டுகளாக இல்லாத வேலையின்மையால் இளைஞர்களும் போராடுபவர்களுக்கு எதிராக திருப்பி விடப்படுகிறார்கள்.

நாம் ஐந்தாண்டுகளில் சந்தித்துள்ள சூழல் விடுதலை இந்தியாவில் இதுவரை இல்லாதது. தொழிற்சங்க, ஜனநாயக உரிமைகள் பறிக்கப்படு கின்றன. மதம் கடந்து தொழிலாளர்கள், ஊழியர்கள் அரசின் கொள்கைகளால் தாக்கப் படுகின்றனர். ஆனால் அதற்கு எதிராக போராட முன்வரும் போது அவர்களின் ஒற்றுமை திட்டமிட்டு சிதைக்கப்படுகிறது. பொருளாதார தேசியத்தைக் காவு கேட்பவர்கள் தேசம், தேச பாதுகாப்பு என்கிற முகத்திரைகளோடு நம் முன் உலா வருகிறார்கள்.

ஐந்தாண்டு காலம் நாம் நிறைய போராட்டங்களை நடத்தியுள்ளோம். களம் நமக்குக் கற்றுக் கொடுத்துள்ளது. யார் நம்மோடு நின்றார்கள்? என்று. களங்களில் கைகோர்த்துள் ளோம். யாருக்கு வாக்களிக்கப் போகிறோம் என்பதைவிட எதற்காக வாக்களிக்கப் போகிறோம் என்பதே முக்கியம். பணபலம், அதிகாரபலம் குறுக்கே வரும். நமது வேண்டுகோள் இதுதான்.

வாக்களிப்பது உங்கள் உரிமை. உங்களின் தெரிவு உங்களுடையதாய் இருப்பது புனிதம். ஆனால் வாக்குகள் விலை போகக் கூடாது. வீணாகவும் கூடாது. உரிமையோடு இதைச் சொல் கிறோம். உங்களின் ஆழ்ந்த பரிசீலனைக்காக.

❖

---

## வென்று காட்ட வந்ததிங்கே தேர்தல் நேரம்...

## (நெஞ்சமுண்டு நேர்மையுண்டு ஓடு ராஜா.. திரையிசைப் பாடல் மெட்டு)

கருப்பும் உண்டு சிவப்பும் உண்டு நீலமும் உண்டு
நேரம் வந்தது மூன்றும் இணைந்து வந்தது
காவிக்கிங்கே இடமில்லை ஓங்கி முழங்கு
ஆதரிப்போர் அனைவரையும் ஓட்டால் விரட்டு.....
(கருப்பும்)

அடிமைகள் ஆட்சியைத் தொடர லாமா-அதை
முடிவுக்குக் கொண்டுவர தேர்தல் வந்தது
ஜாடிக்கேத்த மூடியின்னு ஓடி வராங்க-இங்கே
கோடிக்கை சேர்ந்தாலே முடிவு வருமுங்க....
(கருப்பும்)

வெள்ளாமை போச்சு கொள்ளையும் ஆச்சு-இங்கு
விளைநிலமெல்லாம் நஞ்சாச்சு
கொடிபிடித் திங்கே போராட்டம்-அதை
எடுபிடி அரசோ சிறையெடுக்கும்...
(கருப்பும்)

நான்குவழி எட்டுவழிச் சாலையின்னும்-உயர்
மின்கோபுரம் அமைக்கப் போறோமின்னும்
மோடி எடப்பாடி ரெண்டு பேருமே-கார்ப்பரேட்
நாடிநய வஞ்சகம் செய்யும் நிலையே....
(கருப்பும்)

நாட்டைக் காக்க போர்புரிய வேண்டுமென்று-இங்கு
நாட்டுப் பற்றைத் துருப்புச் சீட்டாக
எடுக்க விடாதிந்த கூட்டணியே-ஓட்டம்
எடுக்க வேணும் இந்த நாட்டை விட்டே...
(கருப்பும்)

ஓய்வூதியம் ஒழித்துக் கட்டிக் கதறவிட்ட-மைய
மோடி எடப்பாடி அரசை விரட்டு
போராடிய ஊழியர் ஆசிரியர்-பட்ட
இன்னல் நீங்க மின்னலென வாக்களிப்பீர்..
(கருப்பும்)

பட்டதெல்லாம் போதும் போதுமின்னு-நாட்டில்
தொட்டதெல்லாம் அழிவில் பார்த்தோமின்னு
ஒட்ட வெட்ட வேணும் விஷச் செடிகள்-ஓட்டில்
திட்டமிட்டுக் காட்டவேணும் நமதணிகள்...
(கருப்பும்)

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு படித்த பாடம்-அதை
இன்றுவிட்டால் இல்லை வாழ்வு தெரிய வேணும்
வென்றுகாட்ட வந்த திங்கே தேர்தல்நேரம்-அதை
நன்றுபயன் படுத்தி வெல்ல வேணும்...
(கருப்பும்)

**- பெரணமல்லூர் சேகரன்**

# விசையுறு பந்தினைப் போல் வினையாற்றுவோம் வாருங்கள்!



**செ**ன்ற வாரத்தில் ஒரு நாள் அவசர இயக்க நடவடிக்கைக்காக திருச்சிக்கு பேருந்துப் பயணம் மேற்கொள்ள வேண்டியிருந்தது. பேருந்து நிலையத்தில் உள்ள செய்தித்தாள் கடையில் அன்றைய நாளிதழ் ஒன்றை வாங்கிக் கொண்டு பேருந்தில் அமர்ந்தேன். வண்டி கிளம்பும் நேரத்தில் பக்கத்தில் ஒருவர் வந்து அமர்ந்தார். ஐம்பது வயதுக்கு மேல் இருக்கும். நான் அந்த நாளிதழை படித்து முடிக்கும் வரை பொறுமையாக இருந்தவர் நான் பேப்பரை மடித்ததும் “சார் நான் கொஞ்சம் பேப்பரை பார்த்துட்டு தரலாமா?'' என்று கேட்டார். “இந்தாங்க தோழர் பாருங்க.'' என்று கொடுத்தேன்.

கொஞ்ச நேரம் பேப்பரை படித்தவர் என் பக்கம் திரும்பி “ஒரே குழப்பமா இருக்குங்க. யாருக்கு ஓட்டு போடறதுன்னே தெரியல?'' என்றார். அவர் பேச்சில் ஒரு ஆற்றாமையும் கூடவே அக்கறையும் இருந்தது.

“என்ன குழப்பம் தோழர். போனதடவை யாருக்கு ஓட்டு போட்டீங்க?'' என்றேன்.

“நல்ல காலம் பொறக்குது. நல்ல காலம் பொறக்குதுன்று கூவிக்கூவி பிரச்சாரம் செய்தாரே மோடி, அவருக்குத்தான் போட்டேன்.'' என்றார்.

“மோடியின் சர்வாதிகார குணம் உங்களுக்கு அப்போது தெரியாதா? அதனால் மதச்சார்பின்மைக்கு ஆபத்து என்று நீங்கள் உணரவில்லையா? 2002-ல் நடந்த குஜராத் சம்பவம் அவ்வளவு எளிதில் மறக்கக்கூடியதா? இவையெல்லாம் உங்கள் சிந்தனையில் வாக்களிக்கும் முன் வரவில்லையா?'' என்று கேட்டேன்.

“நீங்க சொல்றது எல்லாத்தையும் நான் யோசிச்சேன் சார் அப்போ. ஆனா அந்த சமயத்தில் ராகுல்காந்தி மேல எனக்கு நம்பிக்கை வரல. பணவீக்கம் அதிகமா இருந்தது. வளர்ச்சி சரிந்து கொண்டிருந்தது. நாட்டில் எங்கு பார்த்தாலும் ஊழல் ஊழல் என்று ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு முடங்கிப் போயிருந்தது. அதிக எண்ணிக்கையில் இளைஞர்கள் இருந்தார்கள். இந்த சூழ்நிலையில் இந்தியா மீண்டும் வளர்ச்சியை தவற விட்டுவிடக்கூடாதே என்று துடித்தேன். நாட்டில் உள்ள இளைஞர்களுக்கு எல்லாம் வேலை வாய்ப்பு கிடைத்தால் நாட்டின் வளர்ச்சி எங்கோ போய்விடும் என்று நிளைத்தேன். அடுத்து வரும் தலைவரின் நோக்கம் வேலை வாய்ப்புகளை உருவாக்குவதாகத்தான் இருக்க வேண்டும் என விரும்பினேன். அடுத்த 10 ஆண்டுகளுக்கு வேலை வாய்ப்புகள் இல்லாமல் போனால் இளைஞர்களுக்கு வயதாகி விடுமே என்று கவலைப்பட்டேன். அந்த சமயத்தில் தான் ‘ஊழலை ஒழிப்பேன், வருடத்திற்கு இரண்டு கோடி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தித் தருவேன்' என்ற மோடியின் பிரச்சாரம் என்னை கவர்ந்திழுத்தது. என்னை மட்டுமல்ல என்னைப் போன்ற பலரும் மாற்றத்தை விரும்பியே மோடிக்கு வாக்களித்தோம்.''

“இப்போ என்ன ஆச்சு?''

“இளைஞர்களுக்கு எதிர்பார்த்த வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தித் தரப்படவில்லை, விவசாயிகளின் மோசமான நிலை மாறவில்லை. விவசாயப் பொருட்கள் விநியோகத்தில் சீர்த்திருத்தங்கள் கொண்டு வரப்படவில்லை. முழு மெஜாரிட்டியுடன் கவர்ன்மெண்ட் இருப்பதால் சீர்த்திருத்தங்களை விரைந்து மேற்கொண்டு மாற்றத்திற்கு வித்திடும் தலைவராக மோடி இருப்பார்னு நினைத்தேன். அது நடக்கவில்லை.''




“அவ்வளவுதானா, உடலுழைப்பு தொழிலாளர்களின் குறைந்தபட்ச தினசரி கூலி ரூ.600/- ஆக நிர்ணயிக்க வேண்டும், பட்டம் பெற்ற வேலையற்ற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வேண்டும், அரசுத் துறைகளில் பணிபுரியும் ஊழியர்களுக்கு தற்போதைய விலைவாசிக்கேற்ற ஊதிய மாற்றம் வேண்டும், விவசாயிகளின் வறுமையுடன் கூடிய வேதனையான வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும், என்றெல்லாம் பல்வேறு அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள் என பல வர்க்கப் பிரிவினரும் இந்த ஐந்து

ஆண்டுகளில் போராடி வருகிறார்கள். ஆனால், ஆட்சியாளர்கள் செய்தது என்ன? தங்களுக்குத் தாங்களே (நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள்) வரைமுறையற்ற சம்பளம் மற்றும் சலுகைகளை வழங்கிக் கொண்டார்கள். உச்ச நீதிமன்ற, உயர்நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் தேர்தல் ஆணையர்களுக்கு மாதம் ரூ.2.50 லட்சமாக சம்பளத்தை உயர்த்தி வழங்கி அதை 2016 ஜனவரி 1 முதல் முன்தேதியிட்டு வழங்கினர். ஆனால் தொழிலாளர் நலன், விவசாயிகள் கடன், அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு கொடுக்க வேண்டிய சட்டப்படியான ஊதிய மாற்ற நிலுவைகளைப் பற்றி கொஞ்சமும் அக்கறை கொள்ளவில்லை. கஜானாவில் பணமில்லை என்ற இவர்கள்தான் எம்.எல்.ஏ.க்களுக்கு 110 சதவீதம் சம்பளத்தை உயர்த்தினார்கள். அரசு ஊழியர்களுக்கு நியாயமான ஊதிய மாற்றத்தை ஏற்படுத்தாததோடு, முரண்பாடுகளுடன் ஏற்படுத்தப்பட்ட ஊதியமாற்றத்திலும் தமிழகத்தில் 21 மாத ஊதிய மாற்ற நிலுவைத் தொகையை கொடுக்காமல் மறுத்தனர். விவசாயிகள், போக்குவரத்து தொழிலாளர்கள், மின்வாரிய ஊழியர்கள், மாணவர்கள் என அனைத்து பிரிவினரும் ஆட்சியாளர்களின் சர்வாதிகார நடவடிக்கைகளினால் நொந்து போய் தெருக்களில் இறங்கி போராட்டம் நடத்த வேண்டிய நிலைக்கு ஆளாக்கப்பட்டார்கள் தோழர். ' என்றேன்

“உண்மைதான் சார். பொய் சொல்லாவிட்டால் அரசியல்வாதியில்லை, சுயநலம் கொள்ளாவிட்டால் அமைச்சரில்லை, சொன்ன வாக்குறுதிகளை காப்பாற்றிவிட்டால் முதல்வர் இல்லை என்கிற அளவுக்கு அரசியல்களம் சீரழிந்து வருகிறது. யாரைத்தான் நம்புவது என்று தெரியவில்லை. இந்தியாவின் நிதிப்பற்றாக்குறை குறைந்து வருவதாகவும் பணவீக்கம் குறைந்து வருவதாகவும் உள்கட்டமைப்பு வசதிகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும், வங்கி திவால் சட்டம், ஜிஎஸ்டி வரிவிதிப்பு, பயனாளிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக பணம் செலுத்தும் முறை போன்றவற்றால் பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டு வருவதாகவும் பிரச்சாரம் செய்யப்பட்டு வருகிறது. இது உண்மையாக இருக்குமானால் நல்லது.''

“அப்பட்டமான பொய். 1990களில் உலகப் பொருளாதார கொள்கைகள் நடைமுறைக்கு வந்தபோது எல்லோரும் ஆகா ஓகோ என்றனர். இந்தியாவில் சில கட்சிகள் அதை கடுமையாக எதிர்த்தன. அதன் விபரீத விளைவுகளை அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் பொருளாதார சீரழிவை சந்தித்தபோது நாம் உணர்ந்தோம். அதேபோல பண மதிப்பிழப்பு நடவடிக்கையால் கறுப்புப் பணம் வெளிக்கொணரப்படும் என்றனர். ஆனால் இந்த தேசத்து நடுத்தரவர்க்கம் தன்னுடைய வங்கிக் கணக்கிலிருந்து புதிய 500 ரூபாயை மாற்றி வங்கியிலிருந்து வெளியே வருவதற்குள் நாக்கு தள்ளியதுதான் மிச்சம். கறுப்புப் பணமோ கணக்கில், வராத பணமோ சொன்ன அளவில் கால்வாசிகூட வரவில்லை என்ற யதார்த்தத்தையும் நாம் பார்த்தோம்.''

“சார் இதையெல்லாம் கூட சகிச்சுக்கலாம் ஆனால் பாஜகவின் அதிரடி அரசியல் மற்றும் இந்து தேசியவாதத்தை நினைத்தால் பயமாக இருக்கு. பாஜக செய்துவரும் மததேசியவாதத்தால் சமூகங்களில் பிளவுகள் ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளது. சிறுபான்மையினர் பாதுகாப்பு இல்லாமல் உள்ளதாக உணரத் தலைப்பட்டுவிட்டனர். இது தொடருமானால் இந்தியாவில் மதச்சார்பின்மைக்கு பேராபத்து ஏற்பட்டுவிடும். பாஜக தலைவர்கள் அரசியல் மேடைகளில் இந்துத்துவாவை ஊக்கப்படுத்தி வருவதும், பசு காப்பாளர்கள் மாட்டிறைச்சி விற்பவர்களையும், உண்பவர்களையும் நையப்புடைப்பதும், இராமர் கோயில் கட்டியே தீருவோம் என்று கொக்கரிப்பதும் இந்திய மக்களின் நிம்மதியை சீர்குலைத்துவிடும் என்பதில் ஐயமில்லை.'' என்றார்.

“இவ்வளவு தெளிவா இருக்கீங்க. பிறகேன் குழப்பமா இருக்குன்னு சொல்றீங்க?''

“ராகுல்காந்தியை என்னால் சீரியஸான ஒரு தலைவராக ஏற்றுக் கொள்ள முடியவில்லை. சீர்திருத்தங்களை செய்ய விரும்புபவராக ராகுல் காந்தி எனக்கு இன்னும் தென்படவில்லை.''

“என்ன தோழர் அப்படி சொல்லிட்டீங்க. ரபேல் விமான உழலைப்பற்றி அவரின் அழுத்தந்திருத்தமான நிலைப்பாட்டை பார்த்து பாஜக அலறுகிறது. காங்கிரஸ் தேர்தல் அறிக்கையை பாருங்கள் நீட் தேர்விற்கு விலக்கு, விவசாயிகளுக்கான தனிபட்ஜெட், விவசாயக் கடன்கள் தள்ளுபடி, இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு போன்ற முக்கிய அம்சங்களை கருத்தில் கொண்டு தயாரிச்சிருக்காங்க. ஆனால் மோடியைப் பாருங்கள் ராணுவ வீரர்களின் தியாகத்தை தேர்தலுக்கு பயன்படுத்துகிறார். அவர்மீதான ரபேல் ஊழல் சம்பந்தப்பட்ட புத்தகத்தை தமிழில் வெளியிட்டால் ஆட்களை ஏவி வெளியீட்டை நிறுத்தி புத்தகங்களை பறிமுதல் செய்கிறார். தோல்விபயம் அவரை தவறான நடவடிக்கைகளை எடுக்க வைத்திருக்கிறது. இது அதிகாரத் திமிரின் வெளிப்பாடு என்று சொல்லாமல் வேறென்ன சொல்வது. இவற்றையெல்லாம் வைத்து பார்க்கும்போது மோடிக்கு மாற்று இப்போதைக்கு ராகுல்காந்திதான் என்பதில் உங்களுக்கு என்ன சந்தேகம்.''

“மதச்சார்பின்மை, சமூக நல்லிணக்கம் போன்றவற்றிக்காகவாது இந்தமுறை பாஜகவை கண்டிப்பாக தோற்கடிக்க வேண்டும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. ராகுல்காந்தியின் தகுதியைப் பற்றி என்னைப்போன்ற நபர்களுக்கு சந்தேகம் இல்லை. ஆனால் திறமை பற்றிதான் யோசனையாக இருந்தது.

இருந்தாலும் இவ்வளவு உலகமகா பொய்களைச் சொல்லி ஏமாற்றிய மோடிக்கே ஒரு வாய்ப்பு அளித்த இந்திய மக்கள், ராகுல்காந்தி பிரதம வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் அவரின் திறமை மீது நிச்சயம் நம்பிக்கை வைப்பார்கள், வைத்துத்தான் ஆக வேண்டும்.'' என்றவர் ஏதோ ஒரு பெரிய பிரச்னைக்கு தீர்வு கண்டுவிட்டவராக தெரிந்தார்.

“தோழர் மத்திய ஆட்சியை பற்றி சொன்னீங்க. தமிழ்நாட்டு ஆட்சியை பற்றி என்ன நெனக்கறீங்க?''

“வேணாம்ங்க. அதைப்பத்தி பேச வேணாம் விட்டுடுவோம். மேலே எல்லாத்தையும் சரிபடுத்தினா, கீழே எல்லாம் தானா சரியாயிடும்.'' என்றவர் “சார் இரவெல்லாம் தூக்கமில்ல. கொஞ்சநேரம் ஜன்னல் பக்கம் சாய்ஞ்சுக்கிறேன்.'' என்றவர் நான் “சரி'' சொல்லும் முன் குறட்டை விட ஆரம்பித்துவிட்டார்.

தோழர்களே இந்தப் பதிவை உங்கள் முன் வைப்பதற்குக் காரணம், ஊடகங்களாலும், தவறான பிரச்சாரங்களாலும், பொய்யான வாக்குறுதிகளாலும் பொதுவான நபர்களின் வாக்குகள் தவறான அரசியல்வாதிகளுக்கு போய்விடாமல் காக்க வேண்டிய கடமையும் பொறுப்பும் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியர்கள் ஆகிய நம் அனைவருக்கும் உள்ளது என்பதை நாம் அனைவரும் உணர வேண்டும், மற்றவர்களுக்கும் உணர்த்த வேண்டும் என்பதற்காகத்தான். படைபலம், பணபலம், அதிகாரபலம் இவற்றுக்கு எதிராக தேர்தலுக்கான நேரம் நெருங்கி வரும் வேளையில் நம் பிரச்சாரபலம் அவற்றை எல்லாம் தவிடுபொடியாக்கும் பீரங்கிபலம் போல இருக்க வேண்டும். நமது பிரச்சாரத்துக்கு பேருதவியாக அகில இந்திய மாநில அரசு ஊழியர் சங்கம் வெளியிட்டுள்ள “கயமையை வேரறுக்கும் கடமையாற்றுவோம்''. கையேடு பக்கபலமாக இருக்கும். அதன் பதிப்பும் இந்த இதழில் வெளியிடப்பட்டுள்ளது. அதன்மூலமாகவும் பிரச்சாரத்தை விழிப்புணர்வு பிரச்சாரமாக மேற்கொண்டு பொதுவான மற்றும் அனைத்து வாக்காளரின் மனநிலையில் மாற்றம் ஏற்படுத்துவோம்.

உரிமைகள் மறுக்கப்பட்டு, ஆளுங்கட்சியின் தேர்தல் அறிக்கையிலும் தேர்தல் பணிகளிலும் புறக்கணிக்கப் பட்டுள்ள நாம், “நம்மைப் புறக்கணித்தவர்கள், நன்மையை புறக்கணித்தவர்கள்'' என்று உணரவைக்க ஆசிரியர்கள் என்றமுறையில் பாடம் கற்பிக்கவும், அரசு ஊழியர்கள் என்ற முறையில் கோப்புகளை முடித்துவைக்கவும் அயராது பணியாற்ற வேண்டிய நேரம் இது. 2003 அரசு ஊழியர் ஆசிரியர் போராட்டத்திற்கு பின் வந்த தேர்தலில் நாம் செய்து காட்டிய அதே பணி .... பகை முடிக்கும் பணி.... அதன் இரண்டாம் பாகம் தான் 2019. சென்ற 2004ல் நாற்பதிலும் தோற்கடித்த நாம் மீண்டும் ஒரு வாக்குரிமைப் போருக்கு தயாராவோம். அலுவலகங்களிலும், அரங்கங்களிலும், டீக்கடைகளிலும், தெருவோரங்களிலும் நமக்கான தலைவர்களை தேர்ந்தெடுக்க பிரச்சார முழக்கமிடுவோம். விசையுறு பந்தினைப் போல் வினையாற்றுவோம் வாருங்கள். ❖

## தேர்தலில் நாற்பதும் பூச்சியம் தரலாம்

*அரசின் அச்சாணி அரசு ஊழியர்கள்*
*சிரசான சமூகச் சிற்பிகள் ஆசிரியர்கள்*
*முரசுபோர் வேலை நிறுத்தக் கோரிக்கைகள்*
*அரசிடம் வைத்த நிலுவை கோரிக்கைகள்*

*அடக்குமுறைக் கருவி அரசென நோக்கும்*
*ஒடுக்கக் கைது பணியிடை நீக்கம்*
*கொடுத்த குற்றச் சாட்டுக்கள் கோர்க்கும்*
*தொடுத்த பணியிடை மாறுதல் சேர்க்கும்*

*போரது முடிந்து பணியில் சேர*
*அரசது அனுமதி மறுத்த கோரம்*
*புதியது அரசு எந்திர தந்திரம்*
*பழையது அனுபவ வீரர்கள் தீரம்*

*ஓய்வூதியம் குழுக்களின் கண் துடைப்பில்*
*ஊதியமுரண் கோரிக்கை அவ்வாறே குப்பையில்*
*காலியிட நிரப்பல் அவுட்சோர்சிங் அழுகலில்*
*வேலியிட வக்கிலா அரசின் கொள்கையில்*

*போரது முடிந்து கணக்குப் பார்த்ததில்*
*வேரது அரசின் கொள்கை காட்சியில்*
*நாளது வரையில் மத்திய ஆட்சியின்*
*தாளமது மாநில அரசின் ஆட்சியே*

*ஜாடியின் மூடியாய் அரசுகள் இரண்டும்*
*மோடியாய் எடப்பாடியாய் பிடிக்கும் முரண்டும்*
*கோடி கோடியாய் மக்களைச் சுரண்டும்*
*கேடி கார்ப்பரேட் நலனே திரளும்*

*பிணக்கின் உச்சியில் ஊழியர் ஆசிரியர்*
*துணுக்கின் நினைவால் பின்னோக்கிப் பயணிப்பர்*
*கணக்கில் நாற்பதும் பூச்சியம் வழங்கிய*
*இணக்கம் தேர்தலில் இழையோடு முழங்குவர்*

*தடைகள் பலப்பல வடிவில் வரலாம்*
*உடைத்தல் தலையாய பணியெனக் கொளலாம்*
*அடைதல் பகைமுடிக்கும் பணியே எனலாம்*
*தேர்தலில் நாற்பதும் பூச்சியம் தரலாம்*

- **பெரணமல்லூர் சேகரன்**

# கயமையை வேரறுக்கும் கடமையாற்றுவோம்!

போற்றுதல்களும், புகழாரங்களும்

ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை வரும் அரசியல் திருவிழா வந்துவிட்டது. ஏழைகளே நீங்கள்தான் எஜமானர்கள், விவசாயிகளே நீங்கள்தான் பசியாற்றும் வள்ளல்கள், தொழிலாளிகளே நீங்கள்தான் சமுதாயத்தை சீரமைக்கும் சிற்பிகள், ஆசிரியர்களே நீங்கள்தான் அருமைநிறை குருமார்கள், அரசு ஊழியர்களே நீங்கள்தான் அரசு இயந்திரத்தின் அச்சாணிகள் என்ற போற்றுதலுக்கும், புகழாரங்களுக்கும் தேர்தல் முடியும் வரை பஞ்சமிருக்காது. வானத்தை வில்லாக்கி, வரப்புகளை கயிறாக்கி, வங்கக்கடலை அம்பாக்கி, வாழ்க்கையை செம்மையாக்கும் வாக்குறுதிகள் இனி தெருவெல்லாம் எதிரொலிக்கும்.



"அண்ணே, நீங்க தான் எங்கள் எஜமான், நீங்கதான் சிற்பி, நீங்கதான் அரசாங்கத்தின் அச்சாணி... வாங்கண்ணே வந்து எங்களுக்கு ஓட்டு போடுங்கண்ணே..."

தேர்தல் நேரத்து திடீர் பாசம்

நான்காண்டுகளாகத் தெரியாத வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ள ஏழைகள் இப்போது திடீரென கண்டறியப்பட்டு அவர்கள் இந்த ஆண்டு இரண்டாயிரம் ரூபாய் பெற்றுக்கொள்ள மாநில அரசு செய்துள்ள ஏற்பாடுகளும், வாடிய பயிர்களுடன் வாடிப்போய்விட்ட விவசாயிகளை நான்காண்டு களாக கண்டுகொள்ளாத மத்திய அரசு இப்போது அவர்களைத் தேடிப்போய் ஆறாயிரம் ரூபாய் மானியத்தை மூன்று தவணைகளாக கொடுக்க முன்வந்துள்ள கோட்பாடுகளும் பொது மக்களை உணர்ச்சி வசப்பட வைத்து மத்திய, மாநில அரசுகள் மீது கரிசனத்தை ஏற்படுத்தி விடும் என்ற அரசியல் கணக்கு செயல்முறைக்கு வந்துள்ளது.

ஏன் இந்தக் கையேடு?

தேர்தல் விதிமுறைகள் நடைமுறைக்கு வந்து தெருமுனைகளில் வாகன தணிக்கையும், விதிமீறல்கள் மீது நடவடிக்கைகளும் அறிவிக் கப்பட்டிருந்தாலும் அதையும் மீறி வாக்காளர் களுக்கு வழங்கப்படும் அன்பளிப்புகளையும், டோக்கன்களையும், பணமுடிப்புகளையும் தேர்தல் ஆணையத்தால் தடுத்துவிட முடியாது என்ற அசைக்கமுடியாத நம்பிக்கை பாமர வாக்காளனும் புரிந்து வைத்திருக்கும் ஜனநாயகம்.



"இந்த முறை அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியர்கள் பொதுமக்கள் அனைவரும் நூறு சதவீதம் வாக்களிக்கணும். பணத்துக்கு, பரிசுப்பொருட்களுக்கு விலைபோகாம, யாருக்கு வாக்களிச்சா அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு, நாட்டுக்கு நல்லது நடக்கும்னு யோசிச்சு மறக்காம வாக்களிங்க."

இவற்றையெல்லாம் தாண்டி நான்கரை ஆண்டுகால ஆட்சியால் இந்த தேசத்திற்கும் மக்களுக்கும் ஏற்பட்டுள்ள நன்மை தீமை களையும், களத்தில் உள்ள கட்சிகளின் கடந்த கால செயல்பாடுகளையும், நிகழ்கால நடவடிக்கைகளையும் மதிப்பீடு செய்து நாட்டி லுள்ள பிரச்சனைகளுக்கு சரியான தீர்வினை அளிக்கக்கூடிய கட்சிகளுக்கு வாக்களிக்க வேண்டும்.

அதுமட்டுமல்லாமல் மத்திய அரசும், மாநில அரசும் மக்களுக்கு செய்துள்ள நன்மை தீமைகளையும், மற்ற அரசியல் கட்சிகளின் செயல்பாடுகளையும் பட்டியலிட்டு, பெரும் பான்மையான இளைய தலைமுறை, பாமர மக்கள், கூலித்தொழிலாளர்கள், ஒப்பந்த தொழிலாளர்கள், விவசாயிகள், வியாபாரிகள் என அனைத்து தரப்பினருக்கும் வாக்களிப்பின் அவசியத்தை உணர்த்தி அவர்களை சிந்திக்க வைத்து சீர்தூக்கிப் பார்த்து சரியான வேட்பாளர்களுக்கு வாக்களிக்க வைக்க வேண்டியது அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் கடமையாகும். கடந்த நான்கரை ஆண்டுகால மத்திய ஆட்சி மற்றும் தற்போதைய மாநில ஆட்சி இவற்றோடு பிற அரசியல் கட்சிகளின் செயல்பாடுகள் குறித்த ஒரு அலசல்தான் இந்தக் கையேடு.

தமிழகத்தின் தலைவிதியை நிர்ணயிக்கும் இடைத்தேர்தல்

இந்தத் தேர்தல் நாடாளுமன்றத்திற்கான தேர்தல் என்பதால் தேசியப் பிரச்சனைகளை முன்னிறுத்தி இப்பரிசீலனையை மேற்கொள்ள வேண்டி யுள்ள அதே தருணத்தில் தமிழ்நாட்டில் உள்ள 18 தொகுதிகளுக்கான இடைத்தேர்தலும் (இது 21 ஆக கூடுவதற்கான சாத்தியக்கூறுகளும் உள்ளன) நாடாளுமன்றத்

தேர்தலுடன் நடைபெறு வதும் இதன் முடிவுகள் தமிழகத்தில் ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய வல்லமை கொண்டவை என்ற புரிதலின் அடிப்படையிலும் மாநில கட்சிகள் தேசிய அளவிலும் மாநில அளவிலும் மேற்கொண்ட நிலைப்பாடுகளை நாம் சீர் தூக்கிப் பார்க்க வேண்டியுள்ளது. அத்தகைய பரிசீலனைக்கான சில அடிப்படை விஷயங்களை அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஓய்வு பெற்ற அரசு ஊழியர்களின் கவனத்திற்கு கொண்டு சேர்ப்பதும் இப்பிரசுரத்தின் நோக்கம்.

### வசீகர வாக்குறுதிகளால் ஏமாற்றப்பட்ட மக்கள்

இப்போது மத்தியில் ஆளும் அரசு சென்ற தேர்தலில் இந்த நாட்டு மக்களுக்கு அளித்த தேர்தல் வாக்குறுதிகள் நிறைவேற்றவே முடியாதவை என்றபோதிலும் அதை அவர்கள் எடுத்துச் சொன்ன விதத்தால் பெரும் பான்மை மக்களை மட்டுமல்ல நடுநிலையாளர்களையும் கூட "சொன்னபடி செய்துவிடுவார்கள் போலிருக்கிறதே" என்ற நம்பிக்கையை அவர்கள் மீது ஏற்படுத்தி ஆட்சிக்கட்டிலில் அமர வைத்தது.



"இப்போதும் சொல்கிறோம், உங்கள் வங்கிக் கணக்கில் ரூ.15 லட்சம் போட நாங்கள் தயார். வருமான வரி 30% ஜி.எஸ்.டி. 30% பொழுது போக்கு வரி 20% சேவை வரி 10% செஸ் 10% கட்ட நீங்கள் தயாரா?"

சென்ற தேர்தல் பிரச்சாரத்தின் போது அக்கட்சி மக்களை மூன்று பிரிவினராக பிரித்துக் கொண்டது. அதாவது ஏழைகள், நடுநிலையாளர்கள், இளைய தலைமுறையினர். இந்த மூன்று பிரிவினருக்கு ஏற்றபடி வாக்குறுதிகள் உருவாக்கப்பட்டன.

முதலாவது, அரசியல்வாதிகள் ஊழலில் சம்பாதித்த கோடிக்கணக்கான ரூபாய்களை வெளி நாட்டு வங்கிகளில் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதை கண்டுபிடித்து அவற்றை இந்தியா கொண்டுவந்து ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் வங்கிக் கணக்கிலும் சுமார் ரூ.15,00,000/- செலுத்துவதை பதவி யேற்றதிலிருந்து 100 நாட்களுக்குள் செய்து முடிப்பதாகவும், இரண்டாவதாக ஊழல் செய்த வர்கள் எவ்வளவு செல்வாக்கானவர்களாக இருந் தாலும் அவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப் பட்டு தண்டிக்கப்படுவார்கள் என்றும், மூன்றா வதாக, ஆட்சிக்கு வந்ததும் ஆண்டுக்கு 2கோடி இளைய தலைமுறையினருக்கு வேலை வாய்ப்பு களை ஏற்படுத்தித் தருவதாகவும் உறுதி கூறப்பட்டது.

ஆனால் இந்த வாக்குறுதிகளில் ஒன்றுகூட இந்த ஐந்தாண்டுகளில் நிறைவேற்றப்படவில்லை என்பதை இந்தியாவில் உள்ள 130 கோடி மக்களும் உணர்ந்துள்ளனர். இது குறித்து கேள்வி கேட்டால் வாக்குறுதிகள் என்பவை தேர்தல் நேரத்தில் கூறப்படும் கற்பனைகள் அவற்றை சீரியஸாக எடுத்துக்கொண்டு ஏன் நிறைவேற்றவில்லை என்று கேள்வி கேட்கக்கூடாது என்றும், சென்றமுறை வென்ற கட்சி மட்டும் தான் கொடுத்த தேர்தல் வாக்குறுதிகளை அப்படியே நிறைவேற்றி விட்டதா என்ற சந்தர்ப்பவாத சமாதானமும் தான் ஊடகவியலார்களுக்கும், பொதுமக்களுக்கும் கிடைத்த பதிலாகும்.



"நாங்கள் ஊழலை ஒழிப்போம் என்று எப்போதும் சொன்னதில்லை. 'ஊழலை ஒளிப்போம்' என்று வேண்டுமானால் சொல்லியிருப்போம். சந்தேகம் இருந்தால் சென்ட்ரல்ல கேட்டுக்கங்க."

### இவர்கள்தான் நம் ஆட்சியாளர்கள்

நாம் ஆட்சியாளர்களைப்பற்றி அளவீடு செய்ய வேண்டிய தருணம்தான் இது. ஆட்சியாளர்கள், மத்தியில் இருந்தாலும் மாநிலத்தில் இருந்தாலும் அவர்கள் சிந்தனைப் போக்கு சிறிதளவும் மாறாது என்பதற்கான சாட்சிகள் தான் கடந்த நான்கரை ஆண்டுகள் நாம் கண்ட காட்சிகள். ஒருபுறம் உடலுழைப்பு தொழிலாளர்களின் குறைந்தபட்ச தினசரி கூலி ரூ.600/- (அதாவது குறைந்தபட்ச மாத ஊதியம் ரூ.18000/-) ஆக நிர்ணயிக்க வேண்டும், பட்டம் பெற்ற வேலையற்ற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வேண்டும், அரசுத் துறைகளில் பணிபுரியும் ஊழியர்களுக்கு தற்போதைய விலைவாசிக்கேற்ற ஊதிய மாற்றம் வேண்டும், விவசாயிகளின் வறுமையுடன் கூடிய வேதனையான வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும், என்றெல்லாம் பல்வேறு அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள் என அனைத்து வர்க்கப் பிரிவினரும் போராடினார்கள்.

ஆனால், ஆட்சியாளர்களோ தங்களுக்குத் தாங்களே (நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள்) வரைமுறையற்ற சம்பளம் மற்றும் சலுகை களை வழங்கிக் கொண்டார்கள். உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் தேர்தல் ஆணையர்களுக்கு மாதம் ரூ.2.50 லட்சமாக சம்பளத்தை உயர்த்தி வழங்கி அதை

2016 ஜனவரி 1 முதல் முன்தேதியிட்டு வழங்கினர். ஆனால் தொழிலாளர் நலன், விவசாயிகள் கடன், அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு கொடுக்க வேண்டிய சட்டப்படியான ஊதிய மாற்ற நிலுவைகளைப் பற்றி இவர்கள் யாரும் கொஞ்சமும் அக்கறை கொள்ளவில்லை.

கஜானாவில் பணமில்லை என்றவர்கள் எம்.எல்.ஏ.க்களுக்கு 110 சதவீதம் சம்பளத்தை உயர்த்தினார்கள். அரசு ஊழியர்களுக்கு நியாயமான ஊதிய மாற்றத்தை ஏற்படுத்தாததோடு, முரண்பாடுகளுடன் ஏற்படுத்தப் பட்ட ஊதியமாற்றத்திலும் தமிழகத்தில் 21 மாத ஊதிய மாற்ற நிலுவைத் தொகையை கொடுக்காமல் மறுத்தனர்.

வங்கிகளில் வாராக்கடன் - யார் காரணம்?

ஊழல் ஒழிப்பில் மத்திய அரசின் நிர்வாகத் திறமின்மையால், வங்கிகளில் கடன் வாங்கிவிட்டு திருப்பிச் செலுத்தாத தொழிலதிபர் விஜய் மல்லய்யா பிரிட்டனுக்கு தப்பிச் சென்றதன் மூலமாகவும், நீரவ் மோடி வங்கியில் கடன் வாங்க செய்த பித்தலாட்டங்கள் வாயிலாகவும், ஒவ்வொரு வங்கியாக மூடப்படக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது. பிரதமர், மக்கள் நலனுக்கான நபர் அல்ல. அவர் கார்ப்பரேட் கம்பெனிகளின் காப்பாளர் என்பதையும் ஊழல்வாதிகளுக்கு உதவி செய்பவர் என்ற அவப் பெயரையும் ஏற்படுத்தி யுள்ளது. ஆட்சியாளர்களின் வீராப்பு எல்லாம் விவசாயத்திற்காக டிராக்டர் வண்டி வாங்கிய விவசாயி அதற்கான கடன் தவணையை திருப்பிச் செலுத்த முடியாத நிலையில், தவணைப் பணம்கேட்டு அவரை நையப் புடைத்ததை கண்கூடாகப் பார்த்தோம். மேலும் கடன்கேட்கும் பொது மக்களிடம் இல்லாத ஆவணங்களை எல்லாம் கேட்டு கடன் இல்லை என்று கையை விரிப்பதும் நீரவ்மோடி, விஜயமல்லையா போன்ற ஏமாற்றுப் பேர்வழிகளுக்கு எந்த ஆவணமும் இன்றி கோடிக் கணக்கில் கடன் வழங்குவதும் வாடிக்கையாக மாறிவிட்டது.



''அரசே உங்கள் தேர்தல் அறிக்கையில் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் என்ற வார்த்தைகளுக்கு இடம் இல்லையே?"

''அவர்களுக்கு இடம் சிறைச்சாலையில் உள்ளது."

''அரசே என்ன கூறுகிறீர்கள்?"

''ம்..ம்...அவர்களுக்கு இடம் என் இதய சிறைச்சாலையில் உள்ளது என்று சொல்ல வந்தேன்.
டங் ஸ்லிப் ஆகிவிட்டது"

மேலும் வங்கியில் பத்தாயிரம் ரூபாய் கடன்வாங்கிட ஒரு பொதுஜனம் படும் அவஸ்தைகளும், அலைகழிப்புகளும் சத்தியசோதனை போன்ற சுயசரிதை எழுதுமளவிற்கு சம்பவங்கள் கொண்டது என்பது எல்லா நடுத்தர மக்களும் அறிந்துள்ளனர். ஆனால், சிலபேர்கள் மட்டும் பொய்யான ஆவணங்கள் மூலம் வங்கிகளில் நூறு முதல் ஆயிரக்கணக்கான கோடிகளை கடனாக பெறுவதும் அடமான சொத்துக்கள் இல்லாமலேயே வங்கிகள் கடன் கொடுப்பது எப்படி என்ற கேள்வியும் இன்று ஒவ்வொரு இந்தியப் பிரஜையின் மனதிலும் ஏற்பட்டுள்ளது. மக்களின் வரிப்பணம் மற்றும் சேமிப்பு தொகைகளை இப்படி அள்ளிக் கொடுத்ததன் காரணமாக சில வங்கிகள் திவாலாகும் சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ள தையும் இந்த ஆட்சியில் நாம் கண்டோம்.

இந்தியாவில் சமூகநீதிக்கான போராட் டங்களை முன்னெடுத்து மற்ற எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் இட ஒதுக்கீடு, பொது விநியோகம், வேலை வாய்ப்பு வசதி போன்றவற்றில் தனித்துவத் தன்மையுடன் இருந்து வந்த தமிழகம் இப்போதைய மத்திய அரசின் தலையாட்டி பொம்மையாக மாறிவிட்ட தமிழக ஆட்சி யாளர்களால் சமூகநீதிக்கான தனித்துவத் தையும் வாய்ப்புகளையும் ஒன்றன்பின் ஒன்றாக இழந்து வருகிறது. மத்திய அரசின் கொள்கைகள் அனைத்தும் ஏழைத் தொழி லாளர்கள் விவசாயிகள், தினக்கூலிகள், நடுத்தர மக்கள், பொருளாதாரத்தில் பிற்படுத்தப்பட்ட பிரிவினர் என மேட்டுக் குடி தவிர்த்த அனைவரையும் கசக்கிப் பிழிந்து சொல்லொணா துயரத்திற்கு ஆட்படுத்தி, மன உளைச்சலுக்கு ஆளாக்கி வருகிறது.

ஏழைகள் உபயோகப்படுத்தும் சமையல் எரிவாயுவில் தொடங்கி, ரேஷன் பொருட்கள் வரை தாக்குதல்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. ஆதார் கட்டாயம் என அலைகழித்தது முதல் அதை வங்கிக் கணக்கில் சேர்க்க வேண்டும் என்றும், வங்கிக்கணக்கிற்கு பான் கார்டு அவசியம் என்றும், ஸ்மார்ட் கார்டு என்றும் படிப்பறிவில்லாத, ஏழை எளிய மக்களை டிஜிட்டல் யுகத்திற்கு கொண்டு செல்கிறேன் பேர்வழி என்று அலைகழிக்கும் போக்குதான் இன்றுவரை தொடர்ந்து கொண்டிருக்கிறது.

மீனவர் பிரச்சனையாக இருக்கட்டும், விவசாயிகள் பிரச்சனையாக இருக்கட்டும், காவிரி பிரச்னையாக இருக்கட்டும், மாணவர் பிரச்சனையாக இருக்கட்டும் அதில் தமிழகத்தின் நலன்களை புறந்தள்ளி அதற்கு எதிரான நடவடிக்கைகளை மத்திய அரசு எடுத்து வருவதும், தமிழ்நாட்டிற்கான உரிமைகளை

விட்டுக்கொடுக்காமல் போராட வேண்டிய தமிழக அரசோ "பதவியை பறிக்காமல் ஆட்சியைக் கவிழ்க்காமல் நீ என்ன வேணாலும் செய்துக்கோ" என்று மத்திய அரசிடம் அடிமைசாசனம் எழுதிக் கொடுத்து விட்டு, மீனவர்கள், விவசாயிகள், ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் என யாரைப் பற்றியும் கவலைப்படாமல் எம்எல்ஏக்களுக்கு சம்பள உயர்வு பென்சன் உயர்வு என தங்கள் நலனையும் ஆட்சி பறிபோகாமல் இருக்க இராப்பகல் பாராமல் கட்சி ஒன்றிணைப்புக்காக கலந்து பேசி தமிழக மக்களை மறந்துபோன நிலையில் அரசை நடத்திக் கொண்டிருக் கிறார்கள்.

### இந்த ஆட்சியில் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நிலை

அரசு ஊழியர்களைப் பொறுத்தவரை புதிய பென்சன் திட்டம் (CPS) திரும்பப் பெறப்பட்டு பழைய பென்சன் திட்டமே தொடரவேண்டும் என்ற கோரிக்கைகள் வலுத்து வருகின்றன. மேலும் மத்திய அரசின் 7வது ஊதிய மாற்றத்தில் பல்வேறு (Allowances) படிகள் மறுக்கப்பட்டுள்ளன. சில (Allowances) படிகள் குறைக்கப்பட்டுள்ளன. தமிழக அரசு ஊழியர்களைப் பொறுத்தவரை 1.1.2016 முதல் பெற வேண்டிய ஊதிய மாற்றம் 21 மாதங்களுக்குப் பிறகு அதாவது 1.10.2017 முதல் ஏற்படுத்தப்பட்டு 21 மாத ஊதியமாற்ற நிலுவை மறுக்கப்பட்டுள்ளது. இதனால் ரூபாய் 25 ஆயிரம் கோடியை தமிழக அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் இழந்துள்ளனர்.



''இவருகிட்ட இன்னும் எதுனா மிச்சமிருக்கா கேட்டியா?"

''இவரு வாங்கற சம்பளம் மட்டும்தான் இருக்காம் சார்."

நாட்டிலேயே அரசுக்கு ஒழுங்காக வருமான வரி செலுத்துபவர்கள் அரசுத்துறை ஊழியர்கள். ஆனால் 7வது ஊதிய மாற்றத்திற்குப் பின்னர் வருமான வரியில் நிலையான கழிவும், அரசுத்துறை சேமிப்புகள் முதலீடுகள் போன்றவற்றில் காட்டப்படும் சலுகையின் உச்சவரம்பும் ஊதிய மாற்ற உயர்வுக்கு ஏற்ற வகையில் உயர்த்தப்படாத அநீதியும் ஏற்படுத்தப்பட் டுள்ளது.

### தனியார்மயமும், அரசாணை எண் ஐம்பத்தாறும்

பல்வேறு தொழிற்சங்கங்களும், அமைப்புகளும் தனியார் மயத்தை எதிர்த்து தொடர்ந்து குரல் கொடுத்துக் கொண்டிருக்கும் நிலையில் மத்திய, மாநில அரசுகளோ தனியார்மயத்தை நோக்கி தீவிர நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றன. மத்திய அரசின் சுண்டுவிரல் அசைவுக்கு, சரணாகதி அடைந்து சேவகம் செய்யும் தமிழக அரசு தனியார்மயத்தை உறுதிபடுத்தும் வகையில் அரசாணை எண்.56-ஐ வெளியிட்டு மக்கள் நலனை கேள்விக்குறியாக்கியுள்ளது.

ஏற்கெனவே காலியாக விடப்பட்டுள்ள மூன்றரை லட்சம் பணியிடங்களில் வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்து இலவு காத்த கிளியாக காத்திருக்கும் தமிழக இளைஞர்களின் எதிர்காலமும், பட்டப்படிப்பு படித்துவிட்டு தேர்வாணைய தேர்வுகளுக்காக தயாராக இருக்கும் மாணவர்களின் எதிர்காலமும் குழிதோண்டி புதைக்கப்பட்டுள்ளன. ஒப்பந்த மற்றும் அவுட்சோர்சிங் முறையில் ஆட்களை நியமிப்பதன் மூலமாக வேலை வாய்ப்பகங்களில் அரசு மற்றும் அரசுசார்ந்த துறைகளில் வேலைக்காக பதிவு செய்து காத்திருக்கும் சுமார் 43 லட்சம் இளைஞர்கள் மற்றும் 49 லட்சம் பெண்களின் நிலை இப்போது கேள்விக்குறியாகியுள்ளது.

பன்னாட்டு உணவுக்கொள்கை ஆராய்ச்சி நிறுவனம் (IFPRI) வெளியிட்டுள்ள உலக வறுமைக் குறியீடு 2017 பட்டியலில், பட்டியலிடப் பட்டுள்ள 119 நாடுகளில் இந்தியா 100 வது இடத்தைப் பிடித்துள்ளது. இந்தியாவிற்கு கீழே உள்ள இரண்டு ஆசிய நாடுகள் பாகிஸ்தானும், ஆப்கானிஸ்தானும் மட்டும்தான். மேலும் உலக நாணய நிதியம் (IMF) சமீபத்தில் வெளியிட்ட 'உலகப் பொருளாதார கண்ணோட்டம்' இதழில் இந்தியாவின் வளர்ச்சி குறைந்துள்ளது என்றும் அதற்குக் காரணம் பண மதிப்பிழப்பு நடவடிக்கையும், ஜிஎஸ்டி வரிவிதிப்பில் நிலவும் குழப்ப நிலையும்தான் என்று குறிப்பிட்டுள்ளது.

இதேபோல, கறுப்புப் பணத்தை பெருமளவுக்கு வெளியே கொண்டு வருகிறேன் பேர்வழி என்று 1000 மற்றும் 500 ரூபாய் நோட்டுக்களின் பணமதிப்புகளை அதிரடியாக நீக்கி கிராமப்புற பொருளாதாரத்தையும், அமைப்புசாரா தொழில்களையும் சீர்குலைத்து ஏராளமான மக்களின் வேலைவாய்ப்பையும், பொருளாதார நிலையையும் பறித்ததுதான் மத்திய அரசின் பண மதிப்பிழப்பு நடவடிக்கையால் ஏற்பட்ட லாபம். ஏழைகளும், நடுத்தர மக்களும், படிப்பறிவு இல்லாதவர்களும் இந்த அறிவிப்பினால் சொல்லொணா இன்னல்களுக்கு ஆளானதும் பழைய நோட்டுக்களை புது நோட்டுக்களாக மாற்ற நாள் முழுதும் கால்கடுக்க வங்கி வாசல்களில் காத்திருந்து சிலர் அங்கேயே இறந்துபோனதும் தான் மிச்சம்.

**வெறுப்பைத் தோற்றுவித்த நடவடிக்கைகள்**

உற்று நோக்கினால் கடந்த ஐந்து ஆண்டு களில் மத்திய ஆட்சி எடுத்த எல்லா நடவடிக்கை களிலும் கடுமையாக பாதிக்கப்பட்டவர்கள், அன்றாடங் காய்ச்சிகளும், விவசாயிகளும், தொழி லாளர்களும், ஆசிரியர்களும், அரசு ஊழியர்களும் தான். காஸ் சிலிண்டருக்கான மானி யம் பெறுவ தற்கு வங்கிக் கணக்கை இணைக்க கட்டாயப் படுத்தப்பட்டதிலிருந்து, ஆதார் எண்ணை ஒவ்வொரு மூலை முடுக்கிற்கும் அவசியம் என உரைத்து மக்களை அலைகழித்து வருகின்றனர்.

படிக்காத, பாமர மக்கள் நிறைந்துள்ள இந்நாட்டில், டீ குடிக்கக்கூட வக்கில்லாதவனிடம் டிஜிட்டல் இந்தியா பற்றிய போதனைகள் எந்தவிதப் பலனையும் ஏற்படுத்தவில்லை. அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வு, காய்கறிகள் மீதான விலையேற்றம் மற்றும் பெட்ரோல் மற்றும் டீசல் விலைகள் நாள்தோறும் நிர்ணயிக்கும் போக்கு போன்றவை மத்திய அரசின் மீது மக்களுக்கு மிகுந்த வெறுப்பைத் தோற்றுவித் துள்ளன.



“ரொம்ப அவசரம்ங்க, எவ்ளோ?”

“5 ரூபா.”

“இந்தாங்க.”

“ஆதார் கார்டு?”

“ஏம்பா இதுக்குமா ஆதார் கார்டு?”

“ஆமாங்க, எல்லாத்தையும் ஆதார்ல லிங்க் பண்ணியாச்சு.”

**மத்திய அரசிடம் அடகு வைக்கப்பட்ட மாநில உரிமைகள்**

தமிழகத்தைப் பொறுத்த வரையில் கல்வி, காவிரி, கலாச்சாரம், பொதுசேவை வரி, மீனவர் பிரச்னை, மாணவர் எதிர்காலம், வேலை வாய்ப்பு என அனைத்துத்துறைகளிலும் மாநிலத்தின் உரிமைகள் அனைத்தும் மத்திய அரசிடம் அடகு வைக்கப்பட்டு, நிர்வாகம் சீர்கெட்டு, எத்திசையில் பார்த்தாலும் போராட்டங்களும், ஆர்ப்பாட்டங் களுமாய் கடந்த மூன்று ஆண்டுகளாக போய்க்கொண்டிருக்கிறது. கடந்த ஒரு ஆண்டில் மட்டும் தமிழகத்தில் 31 ஆயிரம் போராட்டங்கள் நடைபெற்றதாக முதல்வரே பெருமிதம் கொள்கிறார்.

தமிழகத்தில் நடைபெறும் தலையாட்டி பொம்மை ஆட்சியை பயன்படுத்தி மத்திய அரசாங்கம் உச்சநீதிமன்றம் விதித்துள்ள காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டும் என்ற தீர்ப்பை காலில் போட்டு மிதித்தது. இந்த நாட்டின் உயரிய நீதி அமைப்பான உச்ச நீதிமன்றம் 25 வருடகாலமாக நடந்து வரும் ஒரு வழக்கின் அனைத்து அம்சங்களையும் ஆராய்ந்து ஒரு தீர்ப்பை வழங்கிய பிறகும் அதை நடைமுறைப்படுத்த வேண்டிய இந்த நாட்டின் உயரிய நிர்வாக அமைப்பாக இருக்கும் மத்திய அரசே அதை அமல்படுத்த முன்வரவில்லை.

காரணம் கர்நாடகத்தின் எதிர்ப்பும் அங்கு மத்திய ஆட்சிக்கு உள்ள வாக்கு வங்கியும்தான். அதன்பிறகு அமைக்கப்பட்ட காவிரி மேலாண்மை வாரியமும் பின்னர் அமைக்கப்பட்ட குழுவும் அதன் அதிகார எல்லைகளும் மத்திய அரசின் கைகளுக்குள் வைக்கப்பட்டுள்ள நிலை தமிழகத்தில் விவசாயத்துக்கு பேராபத்தை ஏற்படுத்தியுள்ளது. ஹைட்ரோ கார்பன் தொடர்ந்து தற்போது ஸ்டெர்லைட் ஆலை வரைக்கும் மக்களின் மனநிலையை மதிக்காமல் மத்திய அரசு செயல்படுவதும் மாநில அரசு அதற்கு துணைபோவதும், காவிரி மேலாண்மை வாரியத்தை தன்னாட்சி அதிகாரம் கொண்ட அமைப்பாக ஏற்படுத்தாத நிலையும் தமிழகத்தை மத்திய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்தி வருகிறது என்பதற்கான ஆதாரங்களாகும்.

**பண மதிப்பிழப்பு நடவடிக்கையும் மக்கள் பரிதவிப்பும்**

2016 நவம்பர் 8ஆம் தேதி எந்தவிதமான முறையான ஆலோசனையும் இன்றி பிரதமரால் ரிசர்வ் வங்கியின் ஒப்புதலின்றி தன்னிச்சையாக திடீரென்று அறிவிக்கப்பட்ட பண மதிப்பு நீக்க நடவடிக்கை நாட்டில் கடுமையான எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தி தேசப் பொருளா தாரத்தை படுகுழியில் தள்ளிவிட்டது. ரூ.500 மற்றும் ரூ.1000 நோட்டுக்கள் செல்லாதவை என்கிற அறிவிப்பிற்குப் பிறகு, கள்ளப்பணம் ஒழியும், கறுப்புப் பணம் பிடிபடும், தீவிரவாதம் அடங்கிவிடும், லஞ்சம் ஊழல் நாட்டைவிட்டே ஓடி விடும் என்றெல்லாம் காரணங்கள் சொல்லப்பட்டன.

ஆனால் இதுநாள்வரை அப்படி எதுவும் நடந்துவிடவில்லை. மாறாக பிரதமரின் இந்த அறிவிப்பினால் மிகவும் சிரமத்திற்கு ஆளானவர்கள் கோடிக்கணக்கான நடுத்தர மற்றும் அடித்தட்டு மக்கள்தான். குறிப்பாக ஏடிஎம் வசதி இல்லாத கிராமங்களிலும் நெடுந்தொலைவில் வங்கிவசதி கொண்டிருந்த பகுதிகளிலும் வாழ்கின்ற மக்கள் தங்கள் வேலைக்கு செல்லமுடியாமல் கையில்இருந்த சொற்ப பணத்தை மாற்ற வங்கிகளின் வாசல்களில் நோட்டுக்களை மாற்ற காத்துக்கிடந்தனர்.

ஏழைகள் ஒழிக்கப்பட்ட இந்தியா

ஏழைகளே இல்லாத இந்தியா என்பது ஐம்பது ஆண்டுகளாக அரசியல் கட்சிகள் வைத்து வரும் கோஷம். ஆனால் எந்த அரசாலும் செய்ய முடியாத அந்த சாதனையை ஐந்தாண்டுகளில் நிகழ்த்திக் காட்டியிருக்கிறார் பிரதமர் உணவு பாதுகாப்புச் சட்டத்தின் மூலம். இந்த சட்டத்தின்படி நான்கு அல்லது மூன்று இரு சக்கர வாகனம் வைத்திருப்போர், ஒரு குடும்பத்தின் மொத்த வருமானம் ரூ.8,333 உள்ளோர், 3 அறையுள்ள கான்கிரீட் வீடு வைத்துள்ளோர், டிராக்டர் வைத்திருப்போர், 300 யூனிட்டுக்கும் மேல் மின்சாரம் பயன்படுத்துவோர், வணிகம் செய்வோர், வருமானவரி கட்டுவோர் ஆகியோருக்கெல்லாம் இனி ரேஷன் பொருட்கள் கிடையாது என்று அறிவிக்கப்பட்டது.

மேற்சொன்ன வகைகளுக்குள் அடங்கும் கோடிக்கணக்கான மக்கள் இந்த சட்டத்தின் மூலம் அரசு விதிகளின்படி வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர் களாக கருதப்பட மாட்டார்கள். அப்படி என்றால் இனிமேல் இந்தியாவில் யாரும் வறுமைக்கோட்டிற்கு கீழ் வரமாட்டார்கள். எல்லோரும் நடுத்தர வர்க்கம்தான். இதன்படி ஏழைகள் இல்லாத (அதாவது ஏழைகள் ஒழிக்கப்பட்ட) புதிய இந்தியாவை உருவாக்கியிருக்கிறார் பிரதமர். இந்த சட்டம் இந்தியாவில் உள்ள இரண்டு மாநிலங்களைத் தவிர அனைத்து மாநிலங்களிலும் அமல் படுத்தப்பட்டு விட்டது. அந்த இரண்டு மாநிலங்கள் தமிழகமும் கேரளாவும். தமிழ்நாட்டில் தற்போது நடந்து வரும் அடிமைகள் ஆட்சியில் இப்போதுள்ள மத்திய ஆட்சியே தேர்தலுக்குப்பிறகும் தொடருமானால் இந்த சட்டம் தமிழகத்திலும் அமல்படுத்தப்படுவதற்கு சாத்தியக்கூறுகள் அதிகம் உள்ளன.

ஒரே தேசம், ஒரே வரி - ஜி.எஸ்.டி.

ஜி.எஸ்.டி.யை அமுல்படுத்துவதன் மூலம் இந்திய நாட்டில் பொருளாதாரப் பிரச்சனைகளும், வெகுஜன மக்களின் பிரச்சனைகளும் தீர்ந்துவிடும் என மத்திய அரசு சொன்னது. இதன்மூலம் ஒரு ஒற்றைச் சந்தையை உருவாக்க முடியும், இதில் வெளிப்படைத் தன்மை இருக்கும், விலைவாசி குறையும், கொள்ளை, பதுக்கல் வரி ஏய்ப்பு போன்றவை தவிர்க்கப்படும், நிறுவனங்களிடையே போட்டி உருவாக்கப்பட்டு விலைகள் குறையும், உள்நாட்டு வளர்ச்சி அதிகரிக்கும் என்றெல்லாம் சொல்லப்பட்டது. ஆனால் அது அமுல்படுத்தப்பட்ட பிறகு எல்லாம் தலைகீழாக மாறியது. ஜி.எஸ்.டி. அமுல்படுத்திய முதல் 15 நாட்களில் பொருட்களின் விலை நிலவரம் மாநிலத்துக்கு மாநிலம் வேறு வேறாக இருந்தது.

மொபைல் கட்டணம், எல்.ஐ.சி.பாலிசிகளுக்கான பிரிமியம், வங்கி மற்றும் முதலீடுகள் முதலான சேவைகள், டிடிஎச் சேவைகள், ஆன்லைன் டிக்கட் புக்கிங், சுகாதார பாதுகாப்பு பிரிமியம், பள்ளிக்கட்டணம், இரயில்சேவைகள், குளிர்பானங்கள், சிகரெட்டுகள் மற்றும் புகையிலைப் பொருட்களின் விலை தாறுமாறாக உயர்ந்துள்ளது. சமையல் எரிவாயுவின் விலை அதிகரித்துள்ளது. சாமானிய மக்கள் பயன்படுத்தும் பொருட்களின் விலைகள் உயர்ந்ததால் உற்பத்தி குறைந்து வேலையின்மை பெருகியுள்ளது. இதனால் தொழில் வளர்ச்சி, வேலையின்மை, சுற்றுலா போன்ற தொழில்களும் பாதிப்படைந்துள்ளன.

இன்று நாடு முழுவதும் ஜவுளி, பட்டாசு, தீப்பெட்டி, பீடி, முந்திரி தோட்டம், கட்டுமானம், போக்குவரத்து, மருந்து, தையல் போன்ற சிறு தொழில்கள் ஜிஎஸ்டியால் கடும் நெருக்கடி நிலைக்கு ஆளாகியுள்ளன. ஆனால் ஆல்கஉறால், பெட்ரோலியப் பொருட்கள் போன்றவை ஜிஎஸ்டி வரம்பிற்கு வெளியே வைக்கப்பட்டுள்ளன. ஒரே நாடு ஒரே வரி என்ற அறிவிப்பு வெறும் கண்துடைப்பே என்பதற்கு பெட்ரோல் மீது 57 சதவீத வரி விதிக்கப்படுவதும் டீசல் மீது 55 சதவீத வரி விதிக்கப்படுவதும் சிறந்த உதாரணங்கள். இவற்றை ஜிஎஸ்டிக்குள் கொண்டு வந்தால் உச்சபட்சமாக 28 சதவீதம்தான் வரி மட்டுமே விதிக்க முடியும்.


ஒரு அரசாங்கமானது வருமான சீர்திருத்தம் மூலமாக நாட்டில் சுபிட்சமான ஒரு நிலையை உருவாக்க வேண்டுமென்றால் என்ன செய்ய வேண்டும்? இந்தநாட்டின் செல்வந்தர்கள், கார்ப்பரேட்டுகளிடம் வசூலிக்கப்படும் செல்வ வரி, வருமானவரி போன்றவற்றை உயர்த்தி மக்கள் மீது விதிக்கப்படும் மறைமுக வரியை குறைக்க வேண்டும். ஆனால் இந்தியாவில் என்ன நடக்கிறது? பிற மேற்கத்திய நாடுகள் ஜிஎஸ்டி வரியினை விதிக்கிறது என்பதற்காக நாமும் அதைப்பார்த்து பின்பற்றுவது முட்டாள்தனம். அத்தகைய முட்டாள்தனத்தினால் விளைந்த கடும் பாதிப்புகளை இன்று தேசமும் மக்களும் அனுபவிக்க வேண்டிய நிலை எழுந்துள்ளது. சிறு, குறு தொழில்கள் கடும்பாதிப்புக்கு உள்ளாகி அதனால் பல லட்சக்கணக்கான பேர் வேலை இழந்துள்ளனர்.

பிரதமரின் வெளிநாட்டுப் பயணங்கள்

2014 தேர்தலில் வென்றஉடன் உலகம் சுற்ற புறப்பட்டு விட்டார் பிரதமர். கடந்த நான்கரை ஆண்டுகளில் 84 முறை வெளி நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டுள்ள பிரதமரின் வெளிநாட்டு பயணச் செலவு மட்டும்

2012 கோடி ரூபாய். மன்மோகன்சிங் (2009ஆம் ஆண்டு முதல் 2012ஆம் ஆண்டு) ஆட்சிக் காலத்தில் 36 முறை மட்டுமே வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டிருந்தார். பிரதமரின் வெளிநாட்டு பயணம் ராஜீயரீதியிலான உறவுகளைத் தவிர்த்து வேறு எந்தப் பலனையும் இந்தியாவுக்கு ஏற்படுத்தித் தரவில்லை.

பாகிஸ்தானை பயங்கரவாத நாடாக அறிவிக்கும் முயற்சியில் சீனாவை சமாதானப் படுத்த முடியவில்லை இந்தியாவால். வீட்டோ பவர் கொண்ட சீனா பாகிஸ்தானுக்கு ஆதரவாக உள்ளதால் எல்லைதாண்டிய பயங்கரவாதத்தை பாகிஸ்தானிலிருந்து வேரறுக்க முடியாமல் இந்தியா பாதுகாப்பிற்கான செலவினங்களை பன்மடங்கு அதிகரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் எழுந்துள்ளது. இதனாலும் இந்தியப் பொருளா தாரம் இன்னும் பலவீனமடையக்கூடும். ஆக பிரதமரின் வெளிநாட்டுப் பயணங்கள் வர்த்தக ரீதியிலும் ராஜ்ஜிய ரீதியிலும் உரிய பலன்களை இந்தியாவுக்கு பெற்றுத்தரவில்லை என்பதே நிதர்சனம்.



''இன்னும் போக வேண்டிய நாடு எதுனா இருக்கா?''

''ஜி இப்போ நீங்க போய்கிட்டிருக்கறது 3வது ரவுண்டு.''

மூன்றாண்டு கால தமிழக ஆட்சி

கடந்த மூன்றாண்டுகளாக தமிழகத்தில் செயலற்ற ஆட்சியைத்தான் மக்கள் அனுபவித்து வருகிறார்கள். கர்நாடகத்தில் காவிரி நீர் திறந்துவிட சிறப்பு சட்டமன்றம் கூட்டப்பட்டு உச்சநீதிமன்ற உத்தரவுக்கு எதிராக தீர்மானம் எடுக்கும் நிலையில் இங்கே ஒரு அனைத்துக்கட்சி கூட்டத்தை கூட்டக்கூட ஆளும் அதிமுக அரசு முன்வரவில்லை. ஒரு பிரச்சனை என்று வந்தால் பக்கத்து மாநிலங்களில் எல்லா அரசியல்வாதிகளும் கட்சிபேத மின்றி ஒன்றுகூடும் நிலையில் தமிழகத்தில் அப்படி ஒன்று சேர்ந்து குரல் எழுப்புவதில் கூட அரசியல் ஆதாயங்கள் மட்டுமே முன்னிறுத்தப் படுகின்றனவே தவிர மக்களின் நலன் என்ற மகோன்னதம் மிதிபட்டதுதான் மிச்சம்.



''நேற்றுவரை சண்டை போட்டீங்க, ஒருவர் மீது ஒருவர் சேற்றை வாரி இறைத்துக் கொண்டீர்கள். இன்று மானம் சூடு சொரணை இன்றி எந்த முகத்தை வைத்து கூட்டணி வைத்துக் கொண்டீர்கள் என்று கேட்பவர்களுக்கு ஒன்றை சொல்லிக் கொள்கிறேன். நாங்கள் சண்டை போட்டுக்கொண்டது வேண்டுமானால் எங்கள் நலனுக்காக இருக்கலாம், ஆனால் கூட்டணி வைத்துக் கொண்டது மக்கள் நலனுக்காக. எங்களுக்கு மக்கள் நலனைத் தவிர வேறு என்ன தெரியும்?''

தமிழக மீனவர் பிரச்சனையில் இந்திய அரசு காட்டிவரும் அலட்சியம் கொஞ்சமும் மன்னிக்க முடியாத பச்சைத்துரோகம் என்பது மீண்டும் மீண்டும் நிரூபிக்கப்பட்டு வருகிறது. இலங்கை கடற்படையால் தமிழக மீனவர் பிரிஞ்சோ சுட்டுக்கொல்லப்பட்ட நிகழ்விற்கு இந்திய அரசு இலங்கைக்கு கண்டனம் கூட தெரிவிக்காததும், ஐந்து நாட்கள் அவர் உடலை வாங்கமறுத்து மீனவர்கள் போராட்டம் நடத்தி, மத்திய அமைச்சர் வந்து இனிமேல் இதுபோன்ற நிகழ்வுகள் நடக்காது என்ற உறுதிமொழி தந்ததன் பேரில் உடலைப்பெற்று அடக்கம் செய்த நிகழ்வும், அடுத்த நாளே, மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் மீண்டும் இலங்கை கடற் படையினரால் தாக்கப்பட்டு விரட்டியடிக்கப்பட்ட சம்பவமும் தமிழகம் முழுவதும் கொதிப்பலை களை ஏற்படுத்தி விட்டிருக்கிறது.

பிரச்னைகள் முற்றினால், மாநில முதல்வர் பிரதமருக்கு கடிதம் எழுதி அனுப்பிவிட்டு, ''என் கடமை முடிந்துவிட்டது இனிமேல் அதை செய்ய வேண்டியது மத்திய அரசுதான்'' என தனக் குண்டான பொறுப்பிலிருந்து நழுவிக் கொள்வது நவீன அரசியலின் நரித்தனமாகி வருகிறது.

ஜல்லிக்கட்டு தடையை நீக்க மத்திய அரசிடம் கேட்டால், வழக்கு உச்சநீதி மன்றத்தில் இருக்கிறது, உச்சநீதிமன்ற தீர்ப்பை மீறி எதுவும் செய்யமுடியாது என்று கூறிட இதே மத்திய அரசுதான் காவிரியில் தண்ணீர் திறந்து விடச் சொன்ன உச்ச நீதிமன்றத் தீர்ப்பை மதிக்காத கர்நாடகத்தை கண்டிக்காதது மட்டுமல்ல அதே உச்சநிதிமன்றத்தில் காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க முடியாது என்று 7 கோடி தமிழக மக்களும் அதிர்ச்சி யடையும்படி பதில் மனு தாக்கல் செய்தது.

கர்நாடகத்திற்கு ஒரு நீதி, தமிழகத்திற்கு ஒரு நீதி இதுதான் மத்திய அரசின் ராஜநீதி. வசதிபடும் இடங்களில் உச்சநீதிமன்ற தீர்ப்பை மதிப்பதாக காட்டிக் கொள்வதும், வாக்கு தேவைப்படும் இடங்களில் (கர்நாடகம்) வாக்கு அரசியலுக்காக உச்சநீதிமன்ற தீர்ப்பை மிதிப்பதுமான இரட்டை நிலையை மேற்கொண்டுள்ள மத்திய அரசின் பொய்முகம் தமிழக மக்களுக்கு நன்றாகவே தெரியத் தொடங்கி யுள்ளது.

தூத்துக்குடியில் உள்ள ஸ்டெர்லைட் ஆலையை மூட வேண்டும் என்று அந்த மாவட்ட மக்கள் நூறு நாட்களாக போராட்டம் நடத்தினார்கள். நூறு நாட்களாக போராடும் மக்களை தமிழக அரசின் உயரதிகாரிகளோ, அமைச்சர்களோ, துணைமுதல்வரோ, முதல்வரோ அழைத்துப் பேசவோ சாதக பாதகங்களை கேட்டு பிரச்சனையை சுமூகமாக தீர்க்கவோ அல்லது குறைந்த பட்சம், மக்களின் நலனை மீறி ஆலையை அரசுத் திறக்க ஒப்புக் கொள்ளாது என்றதொரு அறிக்கையையோ அறிவிப்பையோ வெளியிடவோ முன் வரவில்லை. மாறாக நீங்கள் என்ன செய்தாலும் எத்தனை நாள் போராட்டம் நடத்தினாலும் நாங்கள் ஆலையை மூடப் போவதில்லை என்ற கங்கணம் கட்டிக்கொண்டு சர்வாதிகார அராஜகத்தில் இறங்கி, நியாயமான முறையில் போராட்டம் நடத்திய மக்களை சிட்டுக்குருவிகளை சுட்டுத் தள்ளுவதுபோல் கண்மூடித்தனமாக சுட்டுத்தள்ளி அடித்துத் துவைத்து 13 உயிர்கள் வரை உயிர் இழக்கவும் பல அப்பாவி மக்களின் உயிர்கள் ஊசலாடவும் வைத்து படுபாதகச் செயல் புரிந்தனர்.

தமிழக அரசில் போதிய திட்டமிடுதல் கடைபிடிக்கப்படாததாலும், தொழில் வளர்ச்சியில் அக்கறை செலுத்தாததாலும், வளர்ச்சிக்கும் வருவாய்க்குமான திட்டங்கள் வகுக்கப்படாததாலும், அரசு கஜானா வழித்தெடுக்கப்பட்டுவிட்ட நிலையில், வெறும் கையில் முழம்போடும் பசப்பும், பாசாங்கும்தான் நடந்து கொண்டிருக்கிறது. அரசு நிர்வாகம் டாஸ்மாக் விற்பனையை வைத்துத்தான் நடைபெறுகிறது என்ற நிதர்சனமும், 500 டாஸ்மாக் கடைகளை இழுத்து மூடியதால் அரசுக்கு ஏற்பட்ட நட்டத்தை சரிகட்ட மதுவின் விலை உயர்த்தப்பட்டுள்ள அறிவிப்பும், உணர்த்தும் யதார்த்தம் ஒன்றுதான் - அரசு செய்யும் தவறுகளுக்கு தண்டனை பெற வேண்டியவர்கள் அதன் மக்களே.

போக்குவரத்து கழகத்தில் ஓய்வூதியர்களுக்கு நான்கு மாதங்களாக பென்ஷன் தரப்படவிலை. அதைக் கேட்டு போராட்டம் நடத்தினால் மௌனிக்கிறது அரசாங்கம். உக்கிரமான போராட்டம் நடத்தினால் நான்கு போக்குவரத்துக் கழக பணிமனைகளை அடகு வைத்துத்தான் ஓய்வூதியம் தரமுடியும் என்று கூறுகிறது. போக்குவரத்து தொழிலாளர்களுக்கான பென்ஷன் தொகை போக்குவரத்து கழக பயன்பாட்டிற்காக பயன்படுத்தப் பட்டுவிட்டதாக கூறும் அரசு அதை ஊழியர்களுக்கு தெரிவிக்காமலேயே இவ்வளவுநாள் இருட்டடிப்பு செய்து வந்துள்ளது.

இதே போல் பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தில் இதுநாள்வரை பணம் கட்டிக்கொண்டிருக்கும் அரசு ஊழியர்கள் பணம் எவ்வளவு? அது எங்குள்ளது? எனக் கேட்டால் ரூ.21820.90/- கோடி ரூபாய் பொதுவைப்பு நிதியில் சேர்க்கப்பட்டுள்ளதாக அறிவிப்பு வருகிறது.

இது எந்த அளவுக்கு உண்மை என்பதும் இந்த தொகையும் அரசின் வேறு ஏதாவது திட்டங்களுக்கு பயன்படுத்தப்பட்டு விட்டதோ என்ற சந்தேகமும் அரசு ஊழியர்களுக்கு எழுந்துள்ளது.

ரூ.6000 எழுப்பும் நூறாயிரம் கேள்விகள்

ஏழை விவசாயி




விவசாயிகள் தங்கள் வாழ்வாரத்திற்காக செய்யாத போராட்டங்களே இல்லை. தமிழக விவசாயிகள் தமிழகத்திலிருந்து டெல்லி வரை போராடியும், எலி தின்னும் போராட்டம் முதல் நிர்வாணப் போராட்டம் வரை நடத்தியும் அவர்களை பிச்சைக்காரர்களை விட கேவலமாக நடத்தின மத்திய மாநில அரசுகள். விவசாயிகளின் தோழன் என்று ஆட்சிபீடத்தில் அமர்ந்த பிரதமர் விவசாயப் பிரதிநிதிகளை அழைத்துப் பேசி ஆறுதல் கூறக்கூட முன்வரவில்லை என்பதை நாடே கண்டு திகைத்தது.

கார்ப்பரேட்டுகளின் கடன்களை தள்ளுபடி செய்ய முன்வந்த அரசு விவசாயிகளின் கடன்களை ரத்து செய்ய முன்வரவில்லை. மாறாக அவர்களை வீதியில் நிர்வாணமாக ஓடவிட்டு ரசித்த, தண்ணீர் விடாமல் தடுத்த, சொல்லொணாத் துயரம் கொடுத்த, அதே பிரதமர் மீண்டும் நான் விவசாயிகளின் தோழன் என்பதை சிறு குறு விவசாயிகளுக்கு மூன்று தவணையாக ரூ.2,000 வீதம் ரூ.6000 வழங்கப்படும் என்ற அறிவிப்பின் மூலம் கடந்தகால அவரது தவறுகளை மூடிமறைக்க முயற்சிக்கிறார்.

ஐந்து வருடங்களாக கண்ணுக்குத் தெரியாத விவசாயிகள் தேர்தல் நெருங்கும் சமயத்தில் நெருக்கமாகத் தெரிவது ஒன்றும் இந்திய அரசியல் களத்தில் விசித்திரமான நிகழ்வு இல்லை. இந்திய மனித வளர்ச்சி ஆய்வின்படி 2004-05ல் வேளாண்மையை முதன்மை தொழிலாகக் கொண்ட 35% குடும்பங்கள் 2011-12ல் வேளாண்மை சாராத வேறு தொழில்களுக்கு மாறியுள்ளனர்.

2015ஆம் ஆண்டின் தொழிலாளர் சம்மேளனத்தின் விவரங்கள்படி வேளாண்மையில் ஈடுபட்டுள்ள மொத்த விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களில் 49 சதவீதம் விவசாயிகள் மற்றும் 70 சதவீதம் விவசாயம் சார்ந்த தொழிலாளர்கள் தகுதியானவர்களாக இருந்தும் முழுநேர அளவு வேலை பெறுவதற்கு பெரும் போராட்டத்தை சந்திக்க வேண்டியிருந்தது.

பெரும்பாலான நாட்கள் வேலையே கிடைப்பதில்லை. இதனால் மாறிவரும் பொருளாதாரச் சூழ்நிலையில் இவர்களில் பெரும்பாலானோர் வேளாண்மை மற்றும் அது சார்ந்த தொழில்களிலிருந்து மாறி கட்டிடம் கட்டுதல், சாலைஅமைப்பு போன்ற வேலைகளுக்கு மாறி விவசாயிகள் என்ற அந்தஸ்தை இழந்து நிற்கின்றனர். விவசாயத்தோடு ஒப்பிடுகையில் இவ்வாறு விவசாயம் சாராத தொழில்களில் வருமானம் கூடுதலாக இருக்கிறது என்பதே காரணம்.

விவசாயத்தின் மூலம் கிடைக்கும் வருமானத்தை வைத்து இன்றைய பொருளாதாரத் தேவைகளை பூர்த்திசெய்து கொள்வது சவாலாக இருக்கிறது. அதனால் விவசாயத் தொழில்களிலிருந்து மாறி வந்துவிட்ட இவர்கள் பயனாளிகளாக கணக்கில் எடுத்துக்கொள்வார்களா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

ஆனால் தேர்தல் நெருங்கிவிட்ட சூழ்நிலையில் அவர்களின் வாக்குகளை பெறுவதற்காக மிகுந்த ஆராய்ச்சி செய்யாமல் கணிசமான நடுத்தர விவசாய குடும்ப உறுப்பினர்களுக்கு விவசாயத் தொழில் ஏற்கெனவே செய்தவர்கள், தெரிந்தவர்கள் என்ற அடிப்படையில் முதல் தவணை ரூ.2000ஐ தேர்தலுக்கு முன்னதாக அவர்கள் வங்கிக் கணக்கில் சேர்த்துவிட முனைப்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஏழை மற்றும் வறுமைக்கோடுக்குக் கீழ் உள்ள மக்களுக்கு தமிழக அரசு அறிவித்துள்ள ரூ.2000 ரொக்கமும் கூட வாக்குவங்கியை மனதில் கொண்டு வழங்கப்படும் தேர்தல் கொடை என்பதை நாட்டு மக்கள் அனைவரும் அறிவர்.

இந்த திடீர் ரொக்கத் தொகை அறிவிப்பின் மூலம் அடித்தட்டு மற்றும் நடுத்தர மக்களின் வாழ்க்கையை இந்த அரசாங்கங்கள் முன்னுக்கு கொண்டு வர விரும்பவில்லை என்கிற நிதர்சனமும் உணர்த்தப்பட்டுள்ளது. ஏனென்றால் இந்தியாவில் வேலைவாய்ப்பின்மை முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு 6.1 சதவீதமாக இன்றளவும் உள்ளது.

இதன் நிலை கிராமப்புறங்களில் மிகவும் மோசமடைந்துள்ளது. கிராமப்புறங்களில் ஆண்களின் வேலை வாய்ப்பின்மை 2011-12ல் 5 சதவீதமாக இருந்தது. 2016-17ல் 17.4 சதவீதமாகவும் பெண்களின் வேலை வாய்ப்பின்மையானது 4.8 சதவீதத்திலிருந்து 13.6 சதவீதமாகவும் உயர்ந்துள்ளது. இதில் படித்தவர்களும் அடங்குவர்.

ஆக மத்திய மாநில அரசுகளின் ரூ.6000 திட்டமும் ரூ.2000 இலவசமும் ஏழை மற்றும் விவசாயிகளின் நிரந்தரப் பசியை போக்காது என்பதும் இவை ஆட்சியில் இருக்கும் அரசியல்வாதிகளின் தேர்தல்கால ராஜதந்திரங்கள் என்பதும் அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் அறியாதவை அல்ல. எப்போதும் போல் மக்கள் இப்போதும் இந்த சலுகைகளுக்கு மயங்கி தங்களுக்கு வாக்களித்து விடுவார்கள் என்ற ஆட்சியாளர்களின் எண்ணம் இனிமேல் ஈடேறாது என்பதை இந்தத் தேர்தல் நிச்சயம் உணர்த்தும். அதை நாமும் மக்களுக்கு உணர்த்த வேண்டும்.

### இந்தத் தேர்தலிலும் அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் ஆற்ற வேண்டிய தேசக் கடமை

2019 ஜனவரி 22ம் தேதி முதல் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் கூட்டமைப்பான ஜாக்டோ-ஜியோ காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தை கையிலெடுத்தது. இந்தப் போராட்டம் ''சமூக நலனுக்கானது எதிர்கால இளைஞர்களின் கௌரவமான வாழ்க்கைக்கானது'' என்கிற உண்மை நிலை மறைக்கப்பட்டு. ''இது அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் சம்பள உயர்வுக்கான போராட்டம்'' என்ற பொய்ப்பிரச்சாரத்தினாலும் போலி அறிக்கைகளாலும் மக்களின் வெறுப்புக்கான போராட்டமாக இந்த ஆட்சியாளர்களால் சித்தரிக்கப்பட்டது.

தமிழக இளைஞர்களின் எதிர்காலத்தை வேலை வாய்ப்புகளை, வாழ்வாதாரத்தை அழித்துவிடக்கூடிய அரசாணை எண்.56ஐ தீயிட்டுக் கொளுத்தி போராட்டம் நடத்தினோம் நாம். அரசு கண்டுகொள்ளவில்லை. காலிப் பணியிடங்களை நிரப்புங்கள் அப்போதுதான் அரசு அலுவலகத்தில் மக்களுக்கான பணி செய்ய முடியும் என்றோம். கவனத்தில் கொள்ளவில்லை. அரசுப் பள்ளிகளை மூடாதீர்கள் என்று சொன்னோம் காதில் போட்டுக்கொள்ளவில்லை.

3500 சத்துணவு மையங்களை மூடாதீர்கள் என்றோம். கடுகளவும் அவர்கள் எடுத்த முடிவி லிருந்து அசையவில்லை. இவை பற்றியெல்லாம் முதலமைச்சரோ, நிர்வாக சீர்திருத்தத்துறை அமைச்சரோ, உயர்கல்வி அமைச்சரோ மக்களிடம் வாய்திறக்கவில்லை. அவர்களின் நோக்கமெல்லாம் ஆசிரியர்கள் மற்றும் அரசு

ஊழியர்களுக்கு எதிராக பொதுமக்களை திசைதிருப்புவதாக மட்டுமே இருந்ததே தவிர அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் நியாயமான பிரச்னைகளை கேட்டு நிர்வாகத்தை சரிசெய்ய வேண்டும் என்றோ மாணவர்கள் நலனை காக்க வேண்டும் என்றோ இல்லை.

அரசாங்கம் நமக்கு செய்கிறேன் என்று வாக்குறுதி கொடுத்த கோரிக்கைகளையோ, சட்டப்படியாகவே நமக்கு கிடைக்க வேண்டி நிலுவைகளையோ வழங்கவில்லை. மேலும் அரசுத் துறைகளில் உள்ள காலியிடங்களை ஒழித்துவிட்டு கருவூல கணக்குத்துறை போன்ற துறைகளை தனியார்மயமாக்கும் நடவடிக்கைகளில் இறங்கி எதிர்கால இளைய தலைமுறையின் அரசு வேலை வாய்ப்பு உரிமைகளை வேரறுக்க நினைத்தது சமூக நீதிக்காக போராடிய காரணத்திற்காக அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கைகளும், காவல் துறை நடவடிக்கை களும், கைது நடவடிக்கைகளும், கட்டாய பணி மாறுதலும் மேற்கொண்டு, பிறகு உயர்நீதிமன்றமும் மாநில முதல்வரும் கேட்டுக் கொண்டதன் பேரில் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் தங்கள் போராட் டத்தை விலக்கிக் கொண்ட பிறகும், அவர்கள் மீதான துறைரீதியான நடவடிக்கைகளையும், காவல்துறையின் வழக்கு நடவடிக்கைகளையும் கைவிட இந்த மாநில அரசு மறுத்து வருதான செயலும், பலமுறை கோரியும் அரசு தன்னுடைய நடவடிக்கைகளை கைவிடாமல் நம்மை தீவிரவாதிகள் போல் சித்தரிக்கும் போக்கும் அவர்களுக்கெதிரான பிரச்சாரத்திற்குத் தூண்டி விட்டுள்ளது.

ஆட்சியாளர்கள் தங்கள் தவறை உணரவேண்டுமானால் அவர்களுக்கு நாம் தக்க பதிலடி கொடுக்க வேண்டும். 2003ஆம் ஆண்டு 1,76,000 பேர் ஒரே அரசாணை மூலம் டிஸ்மிஸ் செய்யப்பட்டு அவர்கள் அத்துணை பேரும் மீளப் பணியமர்த்தப்பட்டதும், அதனைத் தொடர்ந்து வந்த நாடாளுமன்றத் தேர்தலில் அன்றைய ஆளும்கட்சி 40 தொகுதிகளையும் இழந்ததையும், அப்போது அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் மக்கள் பிரச்சாரம் செய்து பகை முடிக்கும் பணி முடித்ததையும் நாம் மறந்துவிடக்கூடாது.

அதே பாணியில் இப்போதும் நாம் நமது போராட்டத்திற்கான நியாயத்தை மக்களிடம் பிரச்சாரம் செய்து நம்முடைய வேலையை கெடுக்கப் பார்த்த வர்களை வேலைகளற்றுப் போகச் செய்ய வெஞ்சினம் கொள்ள வேண்டும். அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் சக்தி என்னவென்று உணர்த்த வேண்டும். நம்மீது கைவைத்தவர்களின் தலை மண்ணைக் கவ்வும் என்பதை தரணிக்கு இன்னொரு முறை பறைசாற்ற வேண்டும். எனவே புறப்படுவோம் தோழர்களே நமக்கான அணியின் வெற்றிக்காக பணி செய்ய, பகை கொய்ய, படை வெல்ல நாம் ஒவ்வொருவரும் தவறாமல் பங்களிப்போம்.



''ஏம்பா கூட்டத்துக்கு ஆளுங்க யாரையும் காணோம். ஏற்பாடு எதுவும் பண்ணலையா? தலைவருக்கு என்ன பதில் சொறது?''

''பிரதமர் எல்லோருடைய கணக்குலயும் ரூ.14 லட்சம் போட்டுட்டதா யாரோ புரளியை கிளப்பி விட்டுட்டாங்க தலை. அதுனாலா எல்லாரும் பாங்க் வாசல்ல நின்னுகிட்டிருக்காங்க''

தேர்தல் ஆணையம் வாக்காளர்கள் அனைவரும் நூறு சதவீதம் தவறாமல் வாக்களிக்க வேண்டும் என்று ஊடகங்கள் மற்றும் சமூக வலைத்தளங்கள் மூலமாக விழிப்புணர்வை ஏற்படுத்தி வரும் நிலையில், தேர்தல் பணிகளில் தொடர்ந்து ஈடுபட்டு வரும் நாம் ஜனநாயகக் கடமையிலிருந்து வழுவாமல், சார்புத் தன்மையற்ற நேர்மையான தேர்தலை நடத்திக் கொடுக்கும் வல்லமை படைத்த பெரும்சக்தி என்பதை மறந்துவிடக்கூடாது.

அதே சமயம் தேர்தல் பணிகளில் ஈடுபடும் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களை அனைவரும் தங்கள் வாக்குகளை தபால் வாக்குகளாக செலுத்தும் கடமையிலிருந்து சற்றும் பின்வாங்காமல் வாக்களித்து நூறு சதவீதம் தபால் வாக்குகள் பதிவாவதை உறுதி செய்திட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறோம்.

ஒரு ஓட்டுத்தானே என்று அசட்டுத்தனமாக இல்லாமல் நம்முடைய ஒவ்வொருவருடைய ஓட்டும் ஜனநாயகத்தின் தலையெழுத்தை மாற்றும் தன்மை கொண்டவை என்கிற பொறுப்போடு தேர்தல் பணியில் ஈடுபடும் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் அனைவரும் சிந்தாமல், சிதறாமல், தயங்காமல், தவறாமல் தபால் வாக்குகளை நூறு சதவீதம் செலுத்திடக் கேட்டுக்கொள்கிறோம். பல தருணங்களில் தபால் வாக்குகள்தான் தேர்தல் முடிவுகளை மாற்றி அமைத்திருக்கின்றன என்கிற புரிதலோடு தேசத்தின், தலைவிதியை தீர்மானிக்கக்கூடிய இந்தத் தேர்தலில், படித்த பண்பட்ட வர்க்கமான நாம் நூறு சதவீதம் தபால் வாக்கு களை செலுத்துவதையும் இயக்க நடவடிக்கை யாக மேற்கொண்டு நம்முடைய ஜனநாயகக் கடமையை தவறாமல் நிறைவேற்றுவோம்.

நம்முடைய போராட்டங்கள் நடக்கும் போதெல்லாம் கூட இருந்து ஆதரிக்கும் அனைத்து தொழிற்சங்கங்களுக்கும் அதன் தலைவர்களுக்கும். அரசியல் கட்சி தலைவர் களுக்கும் நாம் நன்றிக்கடன்பட்டிருக்கிறோம். அவர்கள்தான் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் போராட் டத்தை உடனே பேசி தீர்வு காணுங்கள் என்று அரசுக்கு அடிக்கடி கோரிக்கை வைத்துக் கொண்டே இருந்தார்கள். அரசியல் கட்சிகளில்

இடதுசாரி கட்சிகள் 31.01.2019ஆம் தேதி அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு ஆதரவாக மாவட்டத் தலைநகரங்களில் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்று அறிவிப்பு விட்டிருந்தார்கள்.

இத்தகைய அமைப்புகளின், அரசியல் கட்சிகளின் ஆதரவில்லாமல் நம்முடைய இத்தனை பெரிய போராட்டம் உலகின் கவனத்தை ஈர்த்திருக்காது. நம்முடைய நியாயமான கோரிக்கைகளை இந்த அரசாங்கம் கூப்பிட்டுப் பேசி தீர்க்க வேண்டும் என்று அரசுக்கு கோரிக்கை, எச்சரிக்கை, அறிக்கை என பல வடிவங்களிலும் ஆதரவளித்த அனைத்து தொழிற்சங்கத் தோழர்களுக்கும் பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களுக்கும் நாம் நன்றி சொல்ல கடன் பட்டிருக்கிறோம், வார்த்தைகளால் அல்ல நமக்கே உரித்தான பிரச்சாரங்களின் மூலம். நன்றிக்கடன் செய்வோமா?




மை
வச்சு செய்வோம் வாங்க

தற்போது நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தல் மற்றும் சட்டமன்ற இடைத்தேர்தலில் காங்கிரஸ், தி.மு.க., கம்யூனிஸ்ட் கட்சிகள், விடுதலை சிறுத்தைகள் கட்சி, ம.தி.மு.க., கொ.ம.க., இந்திய யூனியன் முஸ்லிம் லீக், இ.ஜ.க.,போன்ற கட்சிகள் ஒரு அணியாகவும், மத்தியில் ஆளும் பா.ஜ.க., தமிழகத்தில் ஆளும் அ.தி.மு.க., பா.ம.க., தே.மு.தி.க., போன்றவை மறு அணியாகவும் நின்று போட்டியிடுகின்றன. முக்கிய கட்சிகள் எல்லாம் தேர்தல் அறிக்கை வெளியிட்டுள்ளன. தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தும் சட்டங்களாகி விடாது என்றாலும் எல்லா கட்சிகளும் தங்களது தேர்தல் அறிக்கையில் அரசு ஊழியர், ஆசிரியர் நலன்களுக்காக பழைய பென்சனை மீண்டும் கொண்டுவருதல், அரசுத் துறைகளில் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்புதல் போன்ற அறிவிப்புகளை வெளியிட்டுள்ளன. ஆனால் ஆளும் அதிமுக வெளியிட்டுள்ள தேர்தல் அறிக்கையில் அரசு ஊழியர், ஆசிரியர் என்ற வார்த்தைகளே கூட இடம் பெறவில்லை. அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கான நலன்கள் இல்லாமல் வெளியிடப்பட்ட அதிமுகவின் முதல் தேர்தல் அறிக்கை இதுவாகத்தான் இருக்கும். தேர்தல் அறிக்கையில் கூட அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் நலன்களை புறந் தள்ளக்கூடியவர்களை அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் என்ன செய்வார்கள் என்பதை 2019 தேர்தல் முடிவுகள் உலகுக்கு உணர்த்த வேண்டும். மக்கள் நலன் மறந்த சுயநலவாதிகளின் வேலையை முடிக்கும் வேளை இது. வேலை எடுப்போம் வாருங்கள்.

மேலே விவரித்தவாறு நம்மை காயப்படுத்தியவர்கள் யார்? களங்கப்படுத்தியவர்கள் யார்? காப்பாற்ற முனைந்தவர்கள் யார்? நாம் ஆதரிக்க வேண்டியவர்கள் யார்?என்பதை சிந்தித்து, சிந்திப்பதோடு அல்லாமல் இந்த ஐந்தாண்டுகால மத்திய மற்றும் மூன்றாண்டு கால மாநில ஆட்சிகளின் அவலங்களை நமைச்சார்ந்த நண்பர்களுக்கு, உறவினர் களுக்கு, நட்பு வட்டாரங்களுக்கு எடுத்துக்கூறி இந்த நாட்டினை யார் ஆண்டால் தமிழகத்தின் உரிமைகள் காக்கப்படும் என்கிற புரிதலை நாம் சந்திக்கின்ற ஒவ்வொருவருக்கும் உணர்த்தி நம்மீது ஏவப்பட்டுள்ள தீராப்பழியை தீர்த்துக்கட்டுவோம் வாருங்கள்.

நாட்டையும், நாட்டு நலனையும், நாட்டு மக்களையும் பாதுகாக்க இக்கடமையை செவ்வனே நிறைவேற்ற முன்வருமாறு அனைத்து அரசு ஊழியர்களையும், ஆசிரியர்களையும், ஓய்வூதியர்களையும், இதரபகுதி உழைப்பாளி மக்களையும், வாக்காளப் பெருமக்களையும் அன்போடும் தோழமையோடும் கேட்டுக் கொள்கிறோம். இதன்மூலம் இந்திய அரசியல் அரங்கில் தமிழக அரசியல் மாற்றத்தில் வரலாறு படைப்பதற்கு நமக்கு கிடைத்துள்ள அரிய வாய்ப்பை இந்த நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற இடைத்தேர்தலில் நாம் முழுமையாகப் பயன்படுத்தி அரசு ஊழியர்களையும் ஆசிரியர்களையும் தீவிரவாதிகள் போல் நடத்தி, துறைநடவடிக்கைகள் எடுத்து, காவல் நடவடிக்கைகள் மேற்கொண்டு, பெண் ஊழியர்களை சிறையிலடைத்து, போராட்டம் நடத்தியவர்களை ஆம்புலன்ஸை மறித்ததாக பொய் வழக்கு போட்டு சிறையிலடைத்து காயப்படுத்தி, களங்கப்படுத்தி, முதுகில் குத்தியவர்களை கயமையை வேரறுக்கும் கடமையாற்றுவோம். ❖


தபால் வாக்குச்சீட்டில் வாக்களிப்பது எப்படி?
தபால் வாக்குச்சீட்டு, உறுதிமொழிப் படிவம் உள்ளிட்டவற்றைக் கொண்ட தபால் உறையை தேர்தல் ஆணையம் உங்களுக்கு அனுப்பியிருக்கும். அதனைப் பிரித்து, கீழே விளக்கப்பட்ட நடைமுறையை கவனமாக பின்பற்றி, உங்கள் வாக்கினை செல்லத்தக்க வாக்காக அளியுங்கள்.
1
உறுதிமொழி படிவத்தை பூர்த்தி செய்து உரிய அலுவலரிடம் சான்றொப்பம் பெற வேண்டும் (படிவம் 13-A).
FORM 13-A
DECLARATION BY ELECTOR
[See rule 23(1) (a) of the Conduct of Elections Rules, 1961.]
Election to the Tamil Nadu Legislative Assembly from the ........................ Constituency
(This side is to be used only when the elector signs the declaration himself).
I hereby declare that I am the elector to whom the postal ballot paper bearing serial
2
தபால் வாக்குச் சீட்டில் தாங்கள் தேர்வு செய்ய விரும்பும் வேட்பாளர் பெயருக்கு நேராக உள்ள இடத்தில் குறியீடு செய்யவும்.
3
தபால் வாக்குச் சீட்டினை மட்டும் அதற்காக உள்ள அஞ்சல் உறையில் (படிவம் 13-B) வைத்து ஒட்டவும்.
FORM 13-B
A NOT TO BE OPENED BEFORE COUNTING
ELECTION to the Tamil Nadu Legislative Assembly
from the ........................ Assembly Constituency
POSTAL BALLOT PAPER
Serial number of Ballot Paper
POSTAL BALLOT PAPER
4
பிறகு உறுதி மொழி படிவத்தையும் (படிவம் 13-A), தபால் வாக்குச் சீட்டு வைத்த ஒட்டப்பட்ட உறையையும் (படிவம் 13-B) பெரிய அஞ்சல் உறையினுள் (படிவம் 13-C) வைத்து தேர்தல் நடத்தும் அலுவலருக்கு அனுப்பவும்.
FORM 13-A
DECLARATION BY ELECTOR
POSTAL BALLOT PAPER
ELECTION - IMMEDIATE
POSTAL BALLOT PAPER
(NOT TO BE OPENED BEFORE COUNTING)
VOTE
5
அல்லது (படிவம் 13-C) அஞ்சல் உறையை தங்களுக்கு தபால் வாக்குச் சீட்டு அனுப்பிய தேர்தல் நடத்தும் அலுவலரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள வாக்குச் சீட்டு பெட்டியில் போடவும்.
Chief Electoral Officer, Tamilnadu

# பொள்ளாச்சி வன்கொடுமையை கண்டித்து 15.3.2019 அன்று நடைபெற்ற தமிழகம் தழுவிய ஆர்ப்பாட்டம்

பொள்ளாச்சியில் பாலியல் குற்றச் செயல்களில் ஈடுபட்ட உண்மை குற்றவாளிகளை கைது செய்யக் கோரியும், குற்றவாளிகளுக்கு பின்புலமாக உள்ளவர்களை கைது செய்யக் கோரியும், உயர் நீதிமன்றத்தின் கண்காணிப்பில் விசாரணை நடத்தக்கோரியும் 15.03.19 அன்று தமிழகம் முழுவதும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

## சென்னை

ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி வளாகத்தில் மதிய நேர ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் ம.அந்தோணிசாமி தலைமையேற்றார். தங்கசாலை பகுதி தலைவர் மகேந்திரன் வரவேற்றார். ஆய்வக நுட்பன சங்கத் தலைவர் லூயிஸ், செவிலியர் சங்க பொதுச் செயலாளர் திருமகள், மருத்துவத் துறை நிர்வாக ஊழியர் சங்கத்தின் சீனிவாச சங்கர், பகுதி நிர்வாகி அஜய்ராஜ், மனநல காப்பக ஊழியர் சங்க நிர்வாகி லட்சுமணன், அரசு அச்சக ஊழியர் சங்கத்தின் கிருஷ்ணமூர்த்தி மற்றும் மாநில மகளிர் துணைக் குழு உறுப்பினர் ப.சுந்தரம்மாள், உதவி பேராசிரியர் மரு.கௌரிசங்கர், பட்ட மேற்படிப்பு மாணவர் மரு.லட்சுமணமூர்த்தி ஆகியோர் கண்டன உரையாற்றினர். நிறைவாக மாவட்ட செயலாளர் ஜெ.பட்டாபி கண்டன உரையாற்றினார். விவேகானந்தன் நன்றி கூறினார். இதில் 45 பெண்கள் உட்பட 85 பேர் பங்கேற்றனர்.

## தூத்துக்குடி

மாவட்ட மையம் சார்பில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பாக பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

## நாகை

மாவட்ட மையம் சார்பில் மதியம் நாகை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்டத் தலைவர் ப.அந்துவன் சேரல் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் ஏ.ட்டீ.அன்பழகன் விளக்கவுரை யாற்றினார். ஓய்வூதியர் சங்கத்தைச் சார்ந்த ஜி.காளிமுத்து கண்டனவுரையாற்றினார். நாகை தொழிற்சங்கக் கூட்டமைப்பு தலைவர் சு.சிவகுமார் நிறைவுரையாற்றினார். மாவட்டப் பொருளாளர் பா.ராணி நன்றி கூறினார். 50 பெண்கள் உட்பட 150 அரசு ஊழியர்கள் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

## பெரம்பலூர்

மாவட்ட ஆட்சியரகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட தலைவர் பி.தயாளன் தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் குமரிஅனந்தன் விளக்கவுரை ஆற்றினார். மாவட்ட பொருளாளர் சிவக்குமார், துறைவாரி சங்க நிர்வாகிகள் சுப்பிரமணியன், பொன்.ஆனந்தராசு, கொளஞ்சி, முனைவர் பால்பாண்டி, சகுந்தலா, தெய்வராசா, நூர்ஜஹான், பூங்கொடி, செல்வபாண்டியன், விஜயலட்சுமி ஆகியோர் உரையாற்றினார்கள். நிறைவாக பெரம்பலூர் வட்டார நிர்வாகி இராமலிங்கம் நன்றி கூறினார்.

## காஞ்சிபுரம்

மாவட்ட மையம் சார்பில் மாநில மைய முடிவின்படி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் மாவட்டத் தலைவர் வெ.லெனின், துறைவாரி சங்க நிர்வாகிகள் வி.தென்னரசு, வி.விக்டர் சுரேஷ், பி.ராமமூர்த்தி ஆகியோர் கண்டன உரையாற்றினர். மாவட்ட இணைச் செயலாளர் ஆர்.கோவிந்தன் நன்றி கூறினார். இதில் 21 பெண்கள் உட்பட 80-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

## மதுரை

மதுரையில் மாவட்டத் தலைவர் சு.ஜெயராஜ ராஜேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாநிலத் தலைவர் மு.சுப்ர மணியன் பங்கேற்று கண்டன உரையாற்றினார். மாவட்டச் செயலாளர் க.நீதிராஜா விளக்கவுரை யாற்றினார்.

## தருமபுரி

மாவட்டத் தலைவர் எம்.சுருளிநாதன் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில்

மாநில துணைத் தலைவர் எஸ்.தமிழ்ச்செல்வி, மாவட்ட செயலாளர் ஏ.சேகர், மாவட்ட மகளிர் துணைக் குழு அமைப்பாளர் பி.எஸ். இளவேனில், அண்ணா குபேந்திரன், சி.காவேரி, ஜி.பழனியம்மாள், டி.எஸ்.கவிதா ஆகியோர் உரையாற்றினர். மாவட்ட பொருளாளர் கே.புகழேந்தி நன்றி கூறினார்.

**கடலூர்**

புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக மாலை கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட இணை செயலாளர் எஸ்.வெங்கடேசன் தலைமை தாங்கினார். ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாடு பதவி உயர்வு பெற்ற முதுநிலை பட்டதாரி ஆசிரியர் சங்க மாநில துணை தலைவர் கே.மணவாளன், துறைவாரி சங்க நிர்வாகிகள் கே. இரவி, சி.மச்சேந்திரன், அருண்குமார், வி.சிவபிரகாசம், ஏ.இராஜேந் திரன், ஆர்.பூபாலசந்திரன், ட்டி.புருசோத்தமன் ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள். நிறைவாக மாவட்ட செயலாளர் எல்.அரி கிருஷ்ணன் பேசினார். மாவட்ட பொருளாளர் டி.இரவிச்சந்திரன் நன்றி கூறினார். ஆர்ப்பாட் டத்தில் பெண்கள் உட்பட 83 பேர்கள் கலந்து கொண்டனர்.

❖

# பெண்கள் எழுவார்கள்!

**மனிதர்கள் தானா நீங்கள்?!**
**அடிக்காதேண்ணா கழட்டிடறேன் என்று**
**கதறும் குரல் கேட்டுமா**
**கழன்று போகவில்லை**
**உங்கள் ஆண்மைத்திமிர்?**
**தெருவில் விளையாடும் குழந்தைகளை**
**வெறிநாய் கடித்துக் குதறுகையில்**
**நாயை அடித்துக் கொல்லாமல்**
**மிருகவைத்தியர் எங்கே என்று**
**கேட்பதைப் போல**
**பெண்ணியவாதிகள் எங்கே என்று**
**இப்போதும் பொங்கும் உங்கள்**
**பொதுபுத்தியில் தீயை வைத்தாலென்ன!?**
**அந்த குழந்தைகளின் கூக்குரலில்**
**வயிறு பற்றியெரிய**
**தூக்கமிழந்து தவிக்கும் எம்மை**
**இன்னும் பதட்டப்படுத்தும் தொனியோடு**
**இயக்கங்கள் குறித்து**
**மலிவாய் பேசும் உங்கள் மனசென்ன மரமா கல்லா?**
**சாதி மதம் என்ற புதைக்குழிகளுக்குள்**
**எத்தனை காலமாய்**
**அமிழ்த்திக் கொண்டிருந்தீர்கள், எங்களை!**
**எழுந்து நடக்கவும் எதிரடி கொடுக்கவும்**
**எங்களை பழக்கிய கைத்தடியை**
**எத்தனை முயன்றும் அசைக்க முடியாது உங்களால்.**
**மருகி மருகி நீங்கள் துப்பும்**
**விஷம எச்சிலில் காயப் போவதென்னமோ**
**உங்கள் உதடுகள் தான்...**
**இனியாவது கொஞ்சம்**
**மனிதம் பழகுங்கள்...**
**பெண்கள் ஒன்றும் உங்கள் வீட்டு புங்கை மரமல்ல,**
**ஒடித்து வளர்த்தெடுக்க.**
**அவர்கள் தான்**
**நீங்கள் காலூன்றி நிற்கும் நிலம் என்பதை**
**நினைவில் கொள்ளுங்கள் அற்பங்களே...**
**நிறுத்திக் கொள்ளுங்கள் உங்கள்**
**கலாச்சார அறிவுரைகளையும்**
**கசடு தட்டிப்போன புலம்பல்களையும்...**
**பெண்கள் எழுவார்கள்**
**எத்தனை வீழ்ச்சிக்குப் பிறகும்!!**

- ஹேமலதா,
தஞ்சை

# தேர்தல் காலத்தில் பணி மாற்றத்தை கண்டித்து ஆர்ப்பாட்டம்

## தஞ்சை

தேர்தல் காரணமாக, வட்டாட்சியர்கள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்களின் மாவட்ட மாறுதல்களை கண்டித்தும், அவர்கள் ஏற்கனவே பணியாற்றிய மாவட்டத்திலேயே பணியமர்த்த வேண்டும் என்பதை வலியுறுத்தி தஞ்சையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு 6.3.2019 அன்று நடைபெற்ற ஆர்ப்பாட்டம்.



## கடலூர்

வரும் மக்களவைத் தேர்தலை முன்னிட்டு கடலூர் மாவட்டத்தில் பணியாற்றிய வட்டாட்சியர்களில் 9 பேர் விழுப்புரத்திற்கும், ஒருவர் அரியலூர் மாவட்டத்திற்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இதேபோன்று, மாவட்டத்திலுள்ள 13 ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றி வந்த சுமார் 33 வட்டார வளர்ச்சி அலுவலர்களும் வேறு மாவட்டங்களுக்கு பணியிட மாறுதல் செய்யப்பட்டுள்ளனர். தேர்தல் ஆணையத்தின் இந்த நடவடிக்கைக்கு தமிழ்நாடு வருவாய் துறை அலுவலர்கள் சங்கத்தினர் எதிர்ப்புத் தெரிவித்து கடந்த 6.3.2019 அன்று முதல் பணி புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

மாவட்டம் முழுவதும் வருவாய்த் துறையினர் சுமார் 450 பேர் வருகைப் பதிவேட்டில் கையெழுத்திட்டு பணிக்குச் செல்லாமல் பணி புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

போராட்டத்திற்கு ஆதரவாகவும், வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்களை மீண்டும் பழைய இடத்திற்கே இடமாற்றம் செய்யவும் வலியுறுத்தி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டத்திற்கு சங்கத்தின் மாவட்ட தலைவர் ஆர்.பாலசுப்ரமணியன் தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் எல்.அரிகிருஷ்ணன் கோரிக்கை விளக்கவுரையாற்றினார்.



தமிழ்நாடு அரசு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மாவட்டத் தலைவர் பா.மகேஷ், தமிழ்நாடு கிராம அலுவலர்கள் முன்னேற்ற சங்கம் மாவட்டத் தலைவர் சி.கார்த்திகேயன், அனைத்து குடியிருப்போர் நலச்சங்கம் தலைவர் பி.வெங்கடேசன், ஓய்வூதியர் சங்கம் மாநில செயலாளர் டி.புருஷோத்தமன் ஆகியோர் வாழ்த்தி பேசினர். அரசு ஊழியர் சங்க மாநில செயலாளர் என்.ஜனார்த்தனன் நிறைவுரையாற்றினார். மாவட்ட பொருளர் டி.ரவிச்சந்திரன் நன்றி கூறினார்.

## ஈரோடு

வருவாய் துறை, ஊரக வளர்ச்சி துறை ஊழியர்களுக்கு ஆதரவாக தமிழ்நாடு அரசு ஊழியர் சார்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட தலைவர் ஜெ.பாஸ்கர் பாபு தலைமை தாங்கினார் மாவட்ட செயலாளர் கே.வெங்கிடு விளக்கவுரையாற்றினார். வருவாய் துறை அலுவலர் சங்க மாநில தலைவர் கு.குமரேசன் சிறப்புரையற்றினார். சத்துணவு ஊழியர் சங்க மாநில செயலாளர் ஆண்டாள் வாழ்த்துரை வழங்கினார். மாவட்ட பொருளாளர் வி.உஷாராணி நன்றி கூறினார்.

## திருவாரூர்



தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் திருவாரூர் மாவட்டத்தின் சார்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாநில செயலாளர் எம்.சௌந்தரராஜன் நிறைவுரையாற்றினார். ❖

# மோடி அரசுக்கு

# சமூக - பொருளாதார அறிஞர்கள் 108 பேர் கண்டனம்

# புள்ளி விபரங்களில் கூடவா தலையீடு செய்வது?

இந்திய அரசால், பல்வேறு அரசுத் துறைகள் சார்ந்த புள்ளி விவரங்கள் வெளியிடப்படுவது வழக்கம். நீண்டகாலமாக இந்த நடைமுறை உள்ளது. ஆழமான ஆய்வின் அடிப்படையில் வெளியாகும் இப்புள்ளி விவரங்கள், பல நேரங்களில், ஆட்சியாளர்கள் அளந்து விடும் சாதனைப் பட்டியலுக்கும், உண்மைக்கும் இடையிலான இடைவெளியை, அப்பட்டமாக போட்டு உடைத்து விடுவது உண்டு. எனினும், இதுவரையிலான மத்திய ஆட்சியாளர்கள் அதனை பெரிதுபடுத்தியது இல்லை. புள்ளிவிவர விவகாரங்களில் தலையிட மாட்டார்கள். ஆனால், மத்தியில் மோடி தலைமையிலான பாஜக அரசு அமைந்தது முதல், அரத்துறைகள் புள்ளி விவரங்கள் வெளியிடுவதையே தடுக்கும் அளவிற்கு தலையீடு இருந்து வருகிறது.

கடந்த 2018 நவம்பரில் ஜிடிபி கணக்கிடும் முறையையே மோடி அரசு மாற்றி அமைத்தது. பணமதிப்பு நீக்கத்திற்கு முன்பாக 6 காலாண்டுகளில் பொருளாதார வளர்ச்சி சராசரியாக 8 சதவிகிதம் இருந்தது. ஆனால், பணமதிப்பு நீக்கத்திற்குப் பின் 7 காலாண்டுகளில் பொருளாதார வளர்ச்சி 6.8 சதவிகிதம் என்ற சராசரிக்கு குறைந்து விட்டது. இதனை மறைப்பதற்காகவே ஜிடிபி கணக்கிடும் முறையில் கை வைத்தது. 2004-05 நிதியாண்டை அடிப்படையாகக் கொண்டு, மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி (ஜிடிபி) மதிப்பிடப்பட்டு வந்த நிலையில், அதனை 2011-12-ஆம் நிதியாண்டு அடிப்படைக்கு மோடிஅரசு மாற்றியது.

இதன்மூலம் மன்மோகன் சிங் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சிக்காலத்தில் (2010-11 நிதியாண்டு), இந்திய பொருளாதார வளர்ச்சி 10.3 சதவிகிதமாக இருந்ததை,8.5 சதவிகிதமாக குறைத்துக் காட்டப் பட்டது.இதேபோல 2005-06ஆம் ஆண்டுக் கான வளர்ச்சி 9.3 சதவிகிதம் என்று இருந்ததை 7.9 சதவிகிதமாகவும், 2006-07ஆம் ஆண்டுக்கான வளர்ச்சி 9.3 சதவிகிதம் என்று இருந்ததை 8.1 சதவிகிதமாகவும், 2007-08ஆம் ஆண்டுக்கான வளர்ச்சி 9.8 சதவிகிதம் என்று இருந் ததை 7.7 சதவிகிதமாகவும் மோடி அரசு திருத்தியது. கடைசியாக, மத்திய புள்ளியல் துறையின் கீழ் இயங்கும் தேசிய மாதிரி ஆய்வகத்தின் (NSSO), ஜிடிபி குறித்த தரவுகள், வேலை வாய்ப்பு தொடர்பான விவரங்களிலும் மோடி அரசு கைவைத்தது. இது பொருளாதாரத் துறையினர் மத்தியில் கடும் விவாதங்களை ஏற்படுத்தியது.

இந்நிலையில்தான், இந்தியாவில் கடந்த 5 ஆண்டுகளில் புள்ளி விவரங்களில் அரசியல் தலையீடு இருப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து, உலக நாடுகளைச்சேர்ந்த 108 பொருளாதார அறிஞர்களும், அறிவியலாளர்களும் கையெழுத்திட்டு அறிக்கை ஒன்றை, மோடி அரசுக்கு அனுப்பி வைத்துள்ளனர். அதில், " 2016-17ஆம் நிதியாண்டில் இந்தியாவின் ஜிடிபி பல்வேறு பொருளாதார வல்லுநர்களின் கணிப்புகளுக்கு மாறுபட்டு இருந்தது" என்றும், "புள்ளியல் துறையின் தரவுகளில் அரசியல் தலையீடுகள் இருப்பது மிகவும் கவலையளிக்கக் கூடியது" என்றும் தெரிவித்துள்ளனர்.

"உண்மையான தரவுகளை அரசியல் தலையீடுகளால் ஒடுக்க நினைக்கும் போக்குக்கு எதிராக தொழில்முறை பொருளாதார வல்லுநர்கள், புள்ளியியலாளர்கள் மற்றும் சுயேட்சையான ஆராய்ச்சியாளர்கள் குரல் கொடுக்க வேண்டிய நேரம் இது" என்றும் குறிப் பிட்டுள்ளனர். வேலைவாய்ப்பு ஆய்வறிக்கைகளை வெளியிட தாமதித்த காரணத்தால் தேசிய மாதிரி ஆய்வு அலுவலகத்தைச் சேர்ந்த 2 அதிகாரிகள் தங்கள்வேலையை ராஜினாமா செய்ததையும், தங்கள் அறிக்கையில் சுட்டிக்காட்டியிருக்கும் அறிஞர்கள், "தேசிய மாதிரிஆய்வு அலுவலகம் போன்ற நிறுவனங்கள் சுதந்திரமாகச் செயல்படும் வகையில் புதுப்பிக்கப்பட வேண்டும்; புள்ளியல் நிறுவனங்கள் நேர்மையாக இயங்கவேண்டும்" என்றும் வலியுறுத்தியுள்ளனர்.

அகமதாபாத்தில் உள்ள இந்திய மேலாண்மை நிறுவனத்தின் (NSSO) ராகேஷ் பசண்ட், அமெரிக்காவின் மசாகட்ஸ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஜேம்ஸ் போய்ஸ், ஹார்வர்டு பல்கலைக்கழகத்தின் எமிலி பிரீசா, தில்லி பல்கலைக்கழகத்தின் சதீஸ் தேஷ்பாண்டே, கனடாவில் உள்ள பிரிட்டிஷ் கொலம் பியா பல்கலைக்கழகத்தின் பாட்ரிக் ஃபிரான்காய்ஸ், மும்பை டி.ஐ.ஐ.எஸ். நிறுவனத்தின் ஆர். ராம்குமார், பெங்களூர் ஐஐஎம்-மின் ஹேமா சுவாமிநாதன் மற்றும் ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத்தின் ரோகித் அசாத் ஆகியோர் கடிதத்தில் கையெழுத்திட்டுள்ளனர்.

பொருளாதார அறிஞர்களின் இந்தகடிதத்தை, தேசிய புள்ளியல் துறையின் செயல் தலைவராக இருந்து அண்மையில் பதவி விலகிய மோகனன் பாராட்டியுள்ளார். “இது சரியான நேரத்தில் அனுப்பப்பட்டிருக்கும் செய்தி. பொருளாதார வல்லுநர்களால் வெளிப்படுத்தப்படும் இந்த உணர்வுகளை அரசியல் கட்சிகள் கவனத்தில் கொள்ள வேண்டும். அறிஞர்கள் வெளிப்படுத்தும் இந்தகவலை அண்மைக்கால பிரச்சனைகளுடன் தொடர்புடையதாகும்” என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.. ❖

## எதிர் கொள்வோம்....

பகடை உருட்டி
கணிப்பதல்ல
வாழ்வு.

அறிவியல்
பெருவெளியில்
தழைக்கும்
புது சமூகம்.

பகைகொண்ட
வேந்தனை வீழ்த்தி
படைகளைப் பெருக்குவோம்.

வாழ்வில் நேர்ந்த
வலிகள் கோர்த்த
கோரிக்கைகள்....
வேரறுந்த சொற்களென
தரையில் விழலாமோ?

எதிர்கொள்வோம்
இன்னொரு களத்தில்....

- நடராஜன்

## அரசு ஊழியர் இதழ் பற்றிய அறிக்கை நமுனா (18ஆம்) பாடப் பிரிவு


| | | |
|---|---|---|
| வெளியிடும் இடம் | : | சென்னை-5 |
| வெளியிடும் காலம் | : | மாத இதழ் |
| அச்சிடுபவர் | : | மு.அன்பரசு |
| நாட்டினம் | : | இந்தியர் |
| முகவரி | : | சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ் எண். 19/1 & 21/2 கிட்டாபாத் கான் பகதூர் தெரு, எல்லீஸ் ரோடு, சென்னை - 600 002 |
| வெளியிடுபவர் | : | மு.அன்பரசு |
| நாட்டினம் | : | இந்தியர் |
| முகவரி | : | 46, தேரடித் தெரு திருவல்லிக்கேணி சென்னை - 600 005 |
| ஆசிரியர் | : | மு.சுப்பிரமணியன் |
| நாட்டினம் | : | இந்தியர் |
| முகவரி | : | 46, தேரடித் தெரு திருவல்லிக்கேணி சென்னை - 600 005 |
| ஒரு சதவீதத்துக்கு மேல் பங்குத்தொகை அளித்துள்ளவர்கள் | | தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், 46, தேரடித் தெரு திருவல்லிக்கேணி சென்னை - 600 005 |

மு.அன்பரசு என்னும் நான் மேலே கூறியுள்ள விவரங்கள் அனைத்தும் என் அறிவுக்கும் நம்பிக்கைக்கும் அறிந்தவரை உண்மையென்று இதன்மூலம் உறுதியளிக்கிறேன்.

சென்னை
1.4.2018

**மு.அன்பரசு**
வெளியிடுபவர்


**இருக்கும் வரை**
**இரத்ததானம் செய்வோம்**
**இறந்த பின்**
**உடல் தானம் செய்வோம்**

# ஜாக்டோ-ஜியோ போராட்ட விளக்கக் கூட்டம் 16.3.2019

## காஞ்சிபுரம்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில செயற்குழு முடிவின்படி ஜாக்டோ-ஜியோ காலவரையற்ற போராட்டம், அரசின் அடக்குமுறை, நாம் செல்ல வேண்டிய பாதை ஆகியன குறித்த போராட்ட விளக்கக் கூட்டம் மாவட்டத் தலைவர் வெ.லெனின் தலைமையில் செங்கற்பட்டில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் சா.முகம்மது உசேன் வரவேற்றார். மாநிலச் செயலாளர் தி.கலைச்செல்வி விளக்கவுரையாற்றினார். மாவட்ட இணைச் செயலாளர் ஆர்.கோவிந்தன் நன்றி கூறினார். 70 பெண்கள் உள்பட நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

## நாகப்பட்டினம்

ஜாக்டோ - ஜியோ போராட்ட விளக்கக் கூட்டம் மற்றும் சிறை மீண்டோருக்கான பாராட்டு விழாவும் நாகப்பட்டினம் அரசு ஊழியர் சங்கக் கூட்ட அரங்கில் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் ப.அந்துவன் சேரல் தலைமை தாங்கினார். நாகப்பட்டினம் வட்டச் செயலாளர் எம்.தமிழ்வாணன் வரவேற்புரையாற்றினார் . மாநிலச் செயலாளர் எம்.சவுந்தர்ராஜன் ஜாக்டோ - ஜியோ போராட்டம் குறித்தும் அதன் முடிவுகள் குறித்தும் விளக்கிக் கூறினார்.

பின்னர் போராட்டத்தில் ஈடுபட்டு சிறைக்குச் சென்ற அரசு ஊழியர்கள் கவுரவிக்கப்பட்டனர். அவர்களை வாழ்த்தி மாநிலச் செயலாளர் ஆர்.பன்னீர் செல்வம் சிறப்புரையாற்றினார். இறுதியாக மாவட்டச் செயலாளர் ஏ.ட்டீ.அன்பழகன் நன்றியுரையாற்றினார்..

## திருவாரூர்

செல்வீஸ் ஹோட்டலில், மாநில செயலாளர் எம்.சௌந்தரராஜன் அவர்கள் கலந்துக் கொண்ட ஜாக்டோ-ஜியோ போராட்டமும், அதன் படிப்பினைகளும் என்ற தலைப்பில் விளக்க கூட்டம் நடைபெற்றது.

சிறை சென்ற மூத்த தோழருக்கு இளம் தோழர் செல்வி பி.சுபா பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

## கிருஷ்ணகிரி

ஜாக்டோ - ஜியோ போராட்டத்தின் போது சிறை சென்ற தமிழ்நாடு அரசு கூட்டுறவுத் துறை ஊழியர் சங்கத்தின் மாவட்டத் தலைவர் பழனியம்மாள் அவர்களை அரசு ஊழியர் சங்க மாநில தலைவர் வி.சுப்பிரமணியன் அவர்கள் பாராட்டி நினைவு பரிசினை ஜாக்டோ-ஜியோ போராட்ட விளக்கக் கூட்டத்தின்போது வழங்கிய நினைவு பரிசு.

## கடலூர்

23.03.19 அன்று தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கடலூர் மாவட்டம் சார்பில் சங்க அலுவலகம் கடலூரில் ஜாக்டோ-ஜியோ நடத்திய ஜனவரி 22 காலவரையற்ற போராட்ட விளக்க கூட்டம் மாவட்ட தலைவர் ஆர்.பாலசுப்ரமணியன் தலைமையில் நடைபெற்றது மாவட்ட இணை செயலாளர் வி.கிருஷ்ணமூர்த்தி முன்னிலை வகித்தார். முன்னதாக ஜாக்டோ-ஜியோ போராட்டத்தில் கலந்துக் கொண்டு சிறை சென்ற தோழர்கள் புதுக்கோட்டை மனல் மேடு பள்ளி ஆசிரியர் சிவா, ஊட்டி தோழர் சுசீவன் மற்றும் முன்னால் மத்திய பாதுகாப்பு துறை அமைச்சர் மனோகர் பாரிக்கர், சூளுர் சட்டமன்ற உறுப்பினர் கனகராஜ் மற்றும் காஷ்மீர் உல்பாமா தாக்குதலில் மரணம் அடைந்த பாதுகாப்பு படை வீரர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது. பின்னர் நிகழ்ச்சியில் கலந்துக் கொண்ட அனைவரையும் மாவட்ட செயலாளர் எல்.அரிகிருஷ்ணன் வரவேற்று பேசினார். ஜாக்டோ-ஜியோ போராட்டத்தின் போது சிறை சென்ற தோழர்கள் ஆர். பாலசுப்ரமணியன் மாவட்ட தலைவர் உள்ளிட்ட 6 அரசு ஊழியர் சங்க தோழர்களுக்கு பாராட்டு விழா நடந்தது. பின்னர் விளக்க கூட்டத்தை வாழ்த்தி அனைத்துத் துறை ஓய்வூதியர் சங்க கடலூர் மாவட்ட துணை தலைவர் சி.குழந்தைவேலு, தமிழ்நாடு சாலை பணியாளர் சங்க மாநில துணை தலைவர் கே.இரவி பேசினார். மாநில செயலாளர் என்.ஜனார்த்தனன் "போராட்டமும்-அரசும்" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். மாநில துணை தலைவர் எஸ்.பார்த்திபன் "போராட்டமும்-படிப்பினைகளும்" என்ற தலைப்பில் நிறைவுரையாற்றினார். மாவட்ட

பொருளாளர் இரவிச்சந்திரன் நன்றி கூறினார். கூட்டத்தில் அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் நடைபெற இருக்கின்ற நாடாளுமன்ற தேர்தலில் அனைவரும் வாக்களிக்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதில் 17 பெண்கள் உட்பட 84 பேர்கள் கலந்துக் கொண்டனர்.

## தஞ்சை

ஜாக்டோ_ ஜியோ போராட்ட விளக்கக் கூட்டம், சிறை சென்றவர்களுக்கு பாராட்டுக் கூட்டம் மற்றும் சர்வதேச மகளிர் தின கூட்டம் ஆகியவை 21.03.2019 அன்று தஞ்சை மாவட்டத்தின் சார்பில் நடைபெற்றது. இதில் மாநில பொதுச் செயலாளர் மு.அன்பரசு கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். ❖

## வாசகர் கடிதம்

மார்ச் 2019 இதழ் படித்தேன். ஜாக்டோ-ஜியோ ஜனவரி 19 போராட்டத்தில் 9 நாட்கள் அரசை குலுக்கிய அரசு ஊழியர்கள் - ஆசிரியர்களின் சிறையேகி மீண்ட வீரர்களுக்கு பாராட்டு தெரிவித்தீர்கள். மிகவும் மகிழ்ந்தேன். தணிகைக் கவிதை மற்றும் கந்தர்வர் கவிதைகளை படித்தபோது 1978-ல் நடைபெற்ற போராட்டமும் தோழர் எம்.ஆர்.அப்பன் தலைமையில் பங்கேற்று அண்ணா சாலை உட்பட சென்னை கோட்டையை குலுக்கிய பல்லாயிரக்கணக்கான ஊழியர்களில் நானும் ஒருவனாக இருந்தது நினைவில் நிழலாடி நெஞ்சம் மகிழ்ந்தது. போராட்டம் ஒரு புத்தகம் படிக்கப் படிக்க தூண்டிக் கொண்டே இருக்கும் வாழ்த்துக்கள்.

- **ச.சிவராமன்**, கடலூர்



6.3.2019 அன்று அதிகாரிகள் இடமாற்றத்தை கண்டித்து மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு வடசென்னை மாவட்டக் குழு சார்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டம்

# அரசுப் பணி நிறைவு பாராட்டு விழா

## காஞ்சிபுரம்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட மையம் சார்பில் பணி ஓய்வு பெற்ற மாவட்ட நிர்வாகிகள் எம்.பி.திலகம், வி.ரவிக்குமார் ஆகியோருக்கு மாவட்டத் தலைவர் வெ.லெனின்





தலைமையில் 26.3.2019 அன்று பணி நிறைவு பாராட்டு விழா செங்கல்பட்டியில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் சா.முகம்மது உசேன வரவேற்றார். துறைவாரி சங்க நிர்வாகிகள் எஸ்.பரணி, சுகுமார், பி.ராமமூர்த்தி, வி.விக்டர் சுரேஷ்குமார், எம்.தாமோதரன் ஆகியோர் பங்கேற்று வாழ்த்துரை வழங்கினர். மாநிலச் செயலாளர் தி.கலைச்செல்வி சிறப்புரையாற்றினார். அதனைத் தொடர்ந்து அரசுப் பணியிலும், சங்கப் பணியிலும் கடந்து வந்த பாதை பற்றி எம்.பி.திலகம், வி.ரவிக்குமார் ஆகியோர் தங்கள் ஏற்புரையில் பேசினர். ஆர்.கோவிந்தன் நன்றி கூறினார்.

## சேலம்

சங்கத்தின் மேற்கு வட்டக்கிளை தலைவர் இரா.பாஸ்கர் 28.2.2019 அன்று அரசுப் பணியிலிருநது ஓய்வு பெற்றார். இதனையடுத்து 10.3.2019 அன்று சேலம் ஆர்.டி.பி. ஹாலில் பணி நிறைவு பாராட்டு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட மைய நிர்வாகிகள் பங்கேற்று வாழ்த்தி சிறப்பித்தனர். ❖

## "காத்திருத்தல் சுகம்"

விதைத்தது
வளர்ந்து
விளையாமல்
போகும் போது
விசனப்படவில்லை
விவசாயி...
வளர்ந்த
பயிரை
மடக்கி உழுது
பசுந்தாள்
உரமாக்கி
அடுத்த
மழைக்காய்
காத்திருக்கிறான்...
படித்தது
மறந்து போக
பரீட்சையில்
தேர்வாகாதபோது
பதட்டம்
கொள்ளாமல்
அடுத்த
தேர்விற்காக
காத்திருக்கிறான்
நம் மாணவன்
வானம் வசப்படும்
என்றே....

சுட்டெரிக்கும்
வெயிலுக்குப்பின்
தென்றலாய்
தாலாட்ட
நிலவு வருமென
காத்திருக்கிறது
மரம்....

உறுமீன்
வருமளவும்
கரையில்
கனவுகளோடு
உறவாடிக்
கொண்டிருக்கிறது
நாரை...

எத்தனை முறை
கரையை
அடைந்து
திரும்பினாலும்
மீண்டும்
மீண்டும்
எழும்பி வருகிறது
அலை.....

காத்திருப்பதில்
தான்
சுகம்
நீறுபூத்த
நெருப்பாய்
அணையா
கனலாய்
சித்திரை
வரும் வரை
நித்திரை
மறப்போம்....

தரையில்
தானே
விழுந்த
விதைகள்
விருட்சமாக
மாறும் போது
விருட்சமாகவே
விரும்பி
விதைக்கப்பட்டவை
எப்படி
வீணாகும்...

அறிக்கைகளை
பெற்று
அறிவிப்புகளை
மட்டுமே
வெளியிடுவோரை
நினைவில்கொள்வோம்
நெஞ்சம்
நிறைந்திருக்கட்டும்
நினைவுகள்...
விதைகள்
விருட்சமாகும்
கனவுகள்
நனவாகும்
வரை
காத்திருத்தலும்
ஓர் தவம்.
அதுவே
எம்
சுகம்...

முனைவர் **மதுரை சுகி**

---

## எது கவிதை.....

கவிதை என்பது
யாதெனில் எதுகையும்
மோனையும் என்பர் சிலர்....

எழுதியவர் தவிர
எவர்க்கும் புரியாதது
கவிதை என்பாரும்
உண்டிங்கு ....
பாட்டாளியின் வியர்வையை
வார்த்தை பஞ்சுகளால்
துடைப்பது கவிதை
வேதனைகளால்
மரத்துப்போன
உள்ளங்களில்
சந்தோசத்தை
விதைத்துப்போவது
கவிதை

உதாசீனப்படுத்திய
காதலியின்
இதயத்தையை
ஊடுருவிச்செல்லும்
அ(ன்) ம்பு கவிதை...

வார்த்தை ஜாலங்களில்
கருத்துக்கள்
நீர்த்துப் போகாமல்
காப்பது கவிதை...

எல்லோருக்கும் புரியும்படியான
எண்ண வெளிப்பாடும்
அதனை கண்ணுற்றார்
கற்றார்
உள்ளத்தில்
கவிதை யாத்திடும்
எண்ணத்தை
விதைக்கும்
இயக்கமே...
எமக்கு
கவிதை......

முனைவர் **மதுரை சுகி**

# சர்வதேச மகளிர் தின கருத்தரங்கம்

## வடசென்னை

13.3.2019 அன்று சர்வதேச மகளிர் தினம் அரசு ராஜீவ் காந்தி பொது மருத்துவமனையில் நடத்தப்பட்டது. மாவட்டத் தலைவர் ம.அந்தோணிசாமி தலைமை ஏற்க, குறளகம் பகுதிக் குழு மகளிர் அமைப்பாளர் க.செல்வராணி வரவேற்று பேசினார். இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக மரு.சி.எஸ்.ஸ்ரீபிரியா, இணைப் பேராசிரியர் ஏ.சலீமாபீ, வழக்கறிஞர் சுசீலாஆனந்த் ஆகியோர் பங்கேற்று கருத்துரை வழங்கினர். மாநில மகளிர் துணைக் குழு உறுப்பினர் ப.சுந்தரம்மாள், மாவட்டச் செயலாளர் ஜெ.பட்டாபி மகளிர் தின நோக்கங்களை விளக்கி பேசினர். இந்து சமய அறநிலையத் துறை அலுவலர் சங்கதின் டி.வாசுகி, முன்னாள் மாநில துணைத் தலைவர் வெற்றிராஜன், தென் சென்னை மாவட்டத் தலைவர் டேனியல் ஜெய்சிங் ஆகியோர் பேசினர். நிறைவாக குறளகம் பகுதி செயலாளர் ஏழுமலை நன்றி கூறினார். இதில் 105 பெண்கள் உட்பட 150 பேர் பங்கேற்றனர்.

## காஞ்சிபுரம்

அரசு ஊழியர் சங்க காஞ்சிபுரம் மாவட்ட மையம் சார்பில் சர்வதேச மகளிர் தின கருத்தரங்கம் 16.3.2019 அன்று மகளிர் துணைக் குழு அமைப்பாளர் கே.பூங்குழலி தலைமையில் நடைபெற்றது. மாவட்ட மகளிர் துணைக் குழு உறுப்பினர் அரசு ஊழியர் சங்க மாவட்ட இணைச் செயலாளருமான ஏ.பேபி வரவேற்றார். தமிழ்நாடு ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணியின் என்.மகாலட்சுமி, ஜனநாயக மாதர் சங்கம் சார்பில் பி.ஜெயந்தி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். “பெண்கள் நினைத்தால் மாற்றம் சாத்தியமே” என்ற தலைப்பில் மாதர் சங்க மாநிலச் செயலாளர் வி.பிரமிளா, “போராட்டங்களும் - பெண்களின் முன்னேற்றமும்” என்ற தலைப்பில் மாநிலச் செயலாளர் தி.கலைச்செல்வியும் கருத்துரை வழங்கினர். மகளிர் துணைக் குழு உறுப்பினர் எஸ்.புஷ்பலதா நன்றி கூறினார். 37 ஆண்கள் உட்பட 108 பேர் கலந்து கொண்டனர்.

## நாகை

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க நாகப்பட்டினம் மாவட்ட மையம் சார்பில், நாகை அரசு ஊழியர் சங்க கூட்ட அரங்கில் 16.03.19 அன்று சர்வதேச மகளிர் தின கருத்தரங்கம் மாவட்ட மகளிர் துணைக் குழு அமைப்பாளர் பா.ராணி தலைமையில் நடைபெற்றது. மாவட்ட இணைச் செயலாளர் ஆர்'.கலா வரவேற்புரையாற்றினார். பட்டதாரி ஆசிரியர் ஆர்.ரஷ்யா மற்றும் இல்ல நெறியாளர் செ.எழிலரசி ஆகியோர் "என் குடும்பம்; நம் எதிர்காலம்" என்ற தலைப்பில் கருத்துரையாற்றினர்.

ஊரக வளர்ச்சித் துறையைச் சார்ந்த வளர்மாலா மற்றும் பள்ளி மாணவி து.இ.அனுஸ்ரி ஆகியோர் எழுச்சிப் பாடல்களை பாடினர்.

மகளிர் துணைக்குழு உறுப்பினர்கள் ஜம்ருத் நிஷா மற்றும் சசிகலா ஆகியோர் தீர்மாளங்களை முன்மொழிந்தனர்.

பொள்ளாச்சி பெண்கள் பாலியல் கொடுமைக்கு உரியவகையில் நீதி விசாரணை நடத்தி குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனை பெற்றுத்தர வேண்டும், உச்ச நீதிமன்ற வழிகாட்டுதல்படி பெண்கள் பணிபுரியும் அலுவலகங்களில் நடைபெறும் பாலியல் சீண்டல்களை விசாரிக்க குறைந்தபட்சம் மாவட்ட அளவிலாவது விசாகா கமிட்டி அமைத்திட நாகை மாவட்ட நிர்வாகத்தை கேட்டுக்கொள்கின்றோம் என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்திய ஜனநாயக மாதர் சங்க மாநிலச் செயலாளர் எஸ்.தமிழ்ச்செல்வி "மாற்றம்; முன்னேற்றம்; பெண்கள்" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். இறுதியாக மாவட்ட தணிக்கையாளர் சி.வாசுகி நன்றியுரையாற்றினார்.

## ஈரோடு

மகளிர் தின கருத்தரங்கம் மாவட்ட அரசு ஊழியர் சங்கம் சார்பில் மாவட்ட மகளிர் துணைக் குழு வி.உஷாராணி தலைமையில் 8.3.2019 அன்று காலை இரா.முத்துசுந்தரம் அரங்கத்தில் நடைபெற்றது கூட்டத்தில் முன்னாள் மாநில தலைவர் இரா.தமிழ்செல்வி சிறப்புரை யாற்றினார். மாவட்ட தலைவர் ஜெ.பாஸ்கர் பாபு, மாவட்டச் செயலாளர் கே.வெங்கிடு ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்.

❖

# எண்ணிய முடிதல் வேண்டும் தோழி

சமூக பாதுகாப்பை தரும் ஓய்வூதியம்
என்ற விடிவானுக்காக
காத்திருக்கும் அன்பு தோழியே!
நீ... வேலை நிறுத்த போரிலே
கோரிக்கையையும் நம்பிக்கையையும்
சேர்த்துதான் விதைத்தாய்! தற்காலிகமாய்
அறுவடைக்கு வந்திருப்பதோ
இடமாறுதலும் குறிப்பாணை என்ற
நாற்றுக்கள் மட்டுமே! உந்தன்
நம்பிக்கையோ... சிகாராவில் தூவிய
சம்பா விதை போல் இருக்காது
வெற்றி என்பது கைக்கு எட்டும் தூரமே!
சிந்தித்துப் பார் தோழியே!
இந்த தேசம் வருடம் ஒரு நாள்
உன்னை உழைக்கும் மகளிர் என்கிறது!
இந்த சமூகம் உனக்கொரு
சிம்மாசனம் கொடுத்து விட்டோமென்று
சிலாகித்து கொள்கிறது ஆனால்
உனக்கு மட்டும் தானே தெரியும்!
அதனை சிம்மாசனமே முள்வேலியால்
முடிசூட்டப்பட்டதென்று! கொடுமையான
அவசர பசியை அறுவை சிகிச்சை செய்துவிட்டு
அன்று பஞ்சாலை பெண் தொழிலாளர்கள்
ஆவேசத்துடன் நடத்திய உரிமை போரினிலே
அடைந்தோமே! சமத்துவமும்... வாக்குரிமையும்!
அறிவாயோ...நீ! அன்றுதான்....
உனக்கொரு மரியாதை கிடைத்து விட்டதாய்
மகிழ்ந்து மட்டும் போகிறாயே!
இந்த மரியாதைக்கு தற்போது
நீ கொடுக்கப் போகும் விலையென்ன தெரியுமா?
உனது சுயமரியாதை! எண்ணிப்பார் தோழியே!
ஆளும் வர்க்கம் என்ற இறுமாப்பிலே நாம்
அமைதியாய் நடத்திய போராட்டத்தையும்
பரிகாசம் செய்த நிகழ்வை நினைத்துப் பார்!
எட்டிப் பிடித்தோர்ம பென்சனை என்று
எந்நாளும் பங்கேற்ற வெற்றிப் போரை
திருவிளையாடல் என்ற பெயராலே நம்மை
திக்கற்று நடுவீதியில் நிறுத்திய
நாட்களை நெஞ்சிலேந்து! நீயும்
போராடி பெற்ற வாக்குரிமைக்கு
காலமும் வந்தது! நேரமும் வந்தது! ஆம்
தூக்கிக் கொண்டே நீந்துகின்ற வாத்துகளால்
தூங்க வைத்த கோரிக்கைகள் ஏற்கனவே
உன்னிடமிருந்து திருடப்பட்டவைகள்தான்!
இப்போது திருப்பி கொடுத்திருக்க வேண்டும்
என்பது உனக்கு தெரியுமா?... எதிர்காலத்தில்
ஆசை மட்டும் போதாது...
ஆள் வைத்து போராடவும் முடியாது
போராட்டத்திற்கு லீவு போட்டுவிட்டு
பொழுதுக்கும் கூலி அடிமைத்தனத்துக்கு
வேலை பார்க்கவும் முடியாது! விரைவில்
கூலி அடிமைத்தனத்தை ஒழித்துக்கட்ட
நமக்கான கோரிக்கையை தருபவர் எவரோ
சுற்றமும்... நட்பும்... குடும்பமும் சேர்ந்து
அளிப்போம் போராடி பெற்ற வாக்குரிமையை!
ஆதலால் தோழியே நீயும் தவறாமல்
வாக்களிக்கும் நாளாம் ஏப்ரல் 18ல்
எண்ணிய முடிதல் வேண்டும்.

**- எஸ்.தமிழ்ச்செல்வி**

*தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க நாகை மாவட்டத் தணிக்கையாளர்... கீழையூர் வட்டார வளர்ச்சி அலுவலர்... தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அலுவலர் சங்க மாவட்ட இணைச் செயலாளர்... எஸ்.ஆர்.பாஸ்கரன் அவர்களின் மகள்... செல்வி பா.சுபா 05.03.19 அன்று நாகை மாவட்டக் கருவூலத்தில் இளநிலை உதவியாளராக பணியேற்றார். பணியில் சேர்ந்த முதல் நாளான்றே சங்க அலுவலகம் வந்து பெருமைமிகு அரசு ஊழியர் சங்க உறுப்பினராக தன்னை இணைத்துக் கொண்டார். வாழ்த்துக்கள் தோழர்! ஆரம்பமே அட்டகாசம்!!*

**- ஏ.ட்டீ.அன்பழகன்,**
*மாவட்டச் செயலாளர்*

# பகை முடிக்கும் நேரமிது

தேடிச் சோறு நிதந் தின்று - பல
சின்னஞ்சிறு கதைகள் பேசி - மனம்
வாடித் துன்பமின உழன்று - பிறர்
வாட பல செயல்கள் செய்து - நரை
கூடிக் கிழப்பருவமெய்தி - கொடுங்
கூற்றுக் கிரையெனப் பின் மாயும் - பல
வேடிக்கை மனிதரைப் போலே - நான்
வீழ்வேனென்று நினைத்தாயோ?

- **மகாகவி பாரதியார்**

மதுரையில் 1984ஆம் ஆண்டு மே மாதம் 6ஆம் தேதியன்று அரசு ஊழியர் சங்கம் உதயமானது. அமைப்பாளராக தோழர் எம்.ஆர்.அப்பன் அவர்களும், என்.எல்.சீதரன் பொருளாளராகவும் கொண்டு 21 தோழர்களைக் கொண்ட மாநில நிர்வாகக் குழு அமைக்கப்பட்டது. அரசு ஊழியர் சங்கத்தின் அமைப்பு சட்ட விதியை உருவாக்கிட வருவாய்த் துறை அலுவலர் சங்கத்தின் பொதுச் செயலாளர் எப்.எம்.குத்புதின் தலைமையில் குழு அமைக்கப்பட்டது.

## முதல் மாநில மாநாடு

சென்னை பெரியார் திடலில் 1984 ஜூன் 14, 15 தேதிகளில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் முதல் மாநில மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டில் முன்னாள் முதலமைச்சரும் திமுகவின் தலைவருமான டாக்டர் கலைஞர் அவர்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து தோழர் ஆர்.உமாநாத் அவர்களும் கலந்து கொண்டனர். மாநாட்டில் தமிழகம் முழுவதிலுமிருந்து ஆயிரக்கணக்கான அரசு ஊழியர்கள் பங்கேற்றனர். முன்னதாக நடைபெற்ற பிரதிநிதிகள் மாநாட்டில் 1186 தோழர்கள் கலந்து கொண்டனர். இதில் மாநிலத் தலைவராக கே.கங்காதரன், பொதுச் செயலாளராக எம்.ஆர்.அப்பன், பொருளாளராக என்.எல்.சீதரன், துணைத் தலைவர்களாக எப்.எம்.குத்புதீன், கே.ஆர். சங்கரன், இரா.ஜோதி, வேலாயுதன் நாயர் ஆகியோரும், செயலாளர்களாக எஸ்.சுந்தரேசன், ஆர்.முத்துசுந்தரம், அ.இராமசாமி, கே.இராமசாமி ஆகியோரும் தேர்வு செய்யப்பட்டனர்.

அரசு ஊழியர் சங்கம் தோன்றியபின் கோரிக்கைகளுக்கான போராட்டங்களும், பிரச்சாரங்களும் இடைவிடாமல் தமிழகம் முழுவதும் நடைபெற்றன. சங்கம் ஆரம்பித்த காலத்தில் இரவு பகலாக 3 நாட்கள் 72 மணி நேர உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்பட்டது. எம்.ஜி.ஆர். இந்த காலகட்டத்தில்தான் அரசு ஊழியர் உண்ணாவிரதம் இருக்க தடை விதித்து அரசு ஊழியர்கள் நடத்தை விதியை திருத்தினார். அலுவலக நேரத்திலும், அலுவலக நேரம் கழித்தும் பிரச்சாரம் செய்யக் கூடாது என தடை விதிக்கப்பட்டது. இந்த தடைகளையெல்லாம் அரசு ஊழியர் சங்கம் முறியடித்து போராட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்து சென்றது. இந்நிகழ்வுகள் தமிழக அரசு ஊழியர்களிடையே ஒரு எழுச்சியையும், விழிப்புணர்வையும் ஏற்படுத்தியது.

## 1985 ஜாக்டி போராட்டம்

ஆரம்பப் பள்ளி ஆசிரியர் முதல் கல்லூரி ஆசிரியர் வரை ஒன்று சேர்ந்து அமைக்கப்பட்ட போராட்டக் குழுவே ஜாக்டி என அழைக்கப்பட்டது. அரசு ஊழியர், ஆசிரியர் போராட்ட வரலாற்றில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்திய போராட்டம் இதுதான். நான்காவது ஊதியக் குழுவின் ஆணையை 1985ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 3ஆம் தேதி ஆசிரியர்களால் எரிக்கப்பட்டது. 65000 ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். இதில் 10,000 பெண் ஆரியர்களும் அடங்குவர். அந்த ஆண்டு தீபாவளி தினத்தன்றும் ஆசிரியர்கள் சிறையில் இருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அரசு ஊழியர் சங்கத்தின் மாநில, மாவட்ட நிர்வாகிகள் இந்த ஆசிரியர் போராட்டத்தில் உடனிருந்து ஆதரவளித்தனர். அரசு ஊழியர் சங்கத்தின் ஆதரவு நடவடிக்கைகளை கண்டன ஆசிரியர்கள், அரசு ஊழியர் சங்கத்தின் மீது நம்பிக்கை வைக்க ஆரம்பித்தனர். ஆசிரியர்களும், அரசு ஊழியர்களும் சேர்ந்து கூட்டமைப்பை உருவாக்கி போராட இது வழிவகுத்தது.

போராட்டத்தில் இறுதியில் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். பேச்சுவார்த்தை நடத்தினார். பேச்சுவார்த்தையில் பழி வாங்கும் நடவடிக்கைகளை ரத்து செய்ய வேண்டும் என்பதே முக்கிய கோரிக்கையாக இருந்தது. இந்த

போராட்டத்தின்போது சேலம் சிறையில் இருந்த ஆசிரியர் கருப்பண்ணன் இறந்தார். இது வேலை நிறுத்தத்தில் இருந்த ஆசிரியர்களுக்கு பெரும் கோபத்தை உருவாக்கியது.

## இரண்டாவது மாநில மாநாடு

1986 செப்டம்பர் 12, 13-ல் வேலூரில் அரசு ஊழியர் சங்கத்தின் 2ஆம் மாநில மாநாடு நடைபெற்றது. இதில் மத்திய அரசுக்கிணையாக ஊதியத்தை கேட்டும், அதை வென்றெடுப்ப தற்கான கூட்டு இயக்கத்தை நடத்துவதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது குறிப்பிட்டத் தக்கது ஆகும். இந்த மாநாட்டிலும் திமுக தலைவர் கலைஞர் மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்களும் பங்கேற்று உரையாற்றினர்.

## 1988 காலவரையற்ற வேலை நிறுத்தம்

மத்திய அரசுக்கு இணையான ஊதியம் வேண்டி கூட்டமைப்பில் நடத்தப்பட்ட தயாரிப்பு இயக்கங்களால் அரசு பேரமைப்பின் பிரதிநிதிகளுடன் மே 24, ஜூன் 16, 19-ல் பல சுற்று பேச்சுவார்த்தைகள் தலைமைச் செயலாளர் மற்றும் அதிகாரிகளுடன் நடைபெற்றது. அரசின் பிடிவாதமும், எதிர்மறையான மனோபாவமும் 88 ஜனவரிர 22 முதல் வேலை நிறுத்தம் தொடங்கியது. இது முன்னை போல் இல்லாத ஒன்றாக அரசின் நிர்வாக நடவடிக்கைகள் அனைத்தையும் முடக்கியது. அரசே வேலை நிறுத்தத்தின் வெற்றியை ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று. ஆனால் அரசு இரும்புக்கரம் கொண்டு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டவர்களை நசுக்கப் பார்த்தது. காவல் துறையை ஏவிவிட்டது.

நூற்றுக்கணக்கான முன்னணி ஊழியர்களும், ஆசிரியர்களும் 23ஆம் தேதியே கைது செய்யப்பட்டனர். இந்த அடக்குமுறைகள் ஊழியர்களின் போராட்ட மனோபாவத்தை மேலும் திடப்படுத்தின. 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டனர். 2,500-க்கும் மேற்பட்ட தற்காலிக ஊழியரும், ஆசிரியரும் பணி நீக்கம் செய்யப்ப்பட்டனர். 90 ஆயிரத்திற்கும் மேற்பட்டோரின் மேல் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. ஒட்டுமொத்த மாறுதல் உத்தரவுகள் வழங்கப்பட்டன. அத்தியாவசிய பணிகள் சட்டத்தை பயன்படுத்தப் போவதாக அரசு பயமுறுத்தியது. இருந்தும் இதற்கெல்லாம் பயன் ஏதும் ஏற்படவில்லை. மத்திய தொழிற் சங்கங்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட அரசியல் கட்சிகள் வேலை நிறுத்தத்திற்கு ஆதரவு நல்கின. ஆதரவு நடவடிக்கையாக மாபெரும் கூட்டங்களும், மறியலும், முழு நேர ஆர்ப்பாட்டங்களும் நடத்தப்பட்டன.

ஏஐஎஸ்ஜிஇஎப் தலைவர்கள் தமிழகம் முழுவதும் வந்து கவர்னரை சந்தித்தனர். அதன் பலனாக இப்போராட்ட களத்தில் சம்மேளத்தின் பதாகை உயரப் பறந்து கொண்டிருந்தது. ஆசிரியர், அரசு ஊழியர்களின் மனநிலையை உணர்ந்து கொண்ட அரசு பேரமைப்பை பேச்சுவார்த்தைக்கு அழைத்தது. பேச்சுவார்த்தை துவங்குவதற்கு முன்னதாக சிறையிலிருந்த அமைப்பின் தலைவர்கள் விடுவிக்கப்பட்ட வேண்டும் என பேரமைப்பு கோரியது. தலைவர்கள் விடுவிக்கப்பட்டனர். ஆளுநரின் ஆலோசகரோடு 3 நாட்கள் பேச்சுவார்த்தை நடத்தியதில் ஜூலை 22ல் ஒப்பந்தம் கையெழுத்தானது. போராட்டம் வாபஸ் பெறப்பட்டு 26.7.88 அன்று பணிக்கு திரும்பினர். 8 லட்மசம் ஆசிரியர், அரசு ஊழியர்கள் பங்கேற்று வரலாறு படைத்த இந்த 31 நாள் வேலை நிறுத்தம் இம்மாநிலத்திலேயே நடைபெற்ற மிக நீண்ட போராட்டமாகும்.

அதன் விளைவுதான் மத்திய அரசுக்கு இணையான சம்பளம், ஓய்வூதியம் பெறப்பட்டது. இந்த ஓய்வூதியத்தை ஒரு கொடுபடா ஊதியம் எனவும், இது அரசின் கருணையினால் தரப்படுவதல்ல எனவும் 17.12.1982-ல் அளிக்கப்பட்ட தீர்ப்பு உறுதி செய்தது. சந்திர சூட் உட்பட ஐந்து நீதிபதிகள் டி.எஸ்.நகராவின் வழக்கில் இந்த உன்னதமான தீர்ப்பை வழங்கினர்.

இப்படிப்பட்ட ஓய்வூதியத்தை பறிக்க குறுகிய காலம் ஆட்சி புரிந்த பிரதமர் வாஜ்பாய் காலத்திலிருந்து முயற்சி நடந்தது. அதனை எதிர்த்து இடதுசாரி எம்.பி.க்கள் நாடாளுமன்றத்தில் கடுமையாக போராடினார்கள். ஆனாலும் அமலாகி விட்டது. இதனை எதிர்த்து கடுமையான வேலை நிறுத்தத்திற்கு 2003 ஜூலை 2ஆம் தேதியிலிருந்து தமிழக அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் தயாரானபோது டெஸ்மாவை அமுல்படுத்தி உலகமே அதிரும் விதத்தில் அதிமுக அரசு தனது ஊழியர்களை ஒடுக்க முற்பட்டது. 1,75,000 பேர் பணி நீக்கம் செய்யப்பட்டனர். இதனை எதிர்த்து தொழிற் சங்கங்கள் நமக்கு ஆதரவாக வழக்கு மன்றம் சென்றது.

எல்பிஎப், ஏஐடியுசி, சிஐடியு நீதிமன்றம் சென்றன. சிஐடியு மனு நீதிமன்றத்தால் ஏற்கப்பட்டது. மற்ற மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. டி.கே.ரங்கராஜன் எதிர் தமிழக அரசு வழக்கில் வெற்றி பெற்று 1,42,000 ஊழியர்கள் மீண்டும் பணியில் சேர முடிந்தது.

## 40 சதவீத ஊதிய உயர்வு

தொடர்ந்து இன்று அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் கணிசமான சம்பளமும், ஓய்வூதியமும் பெறுவதற்கு மூலகாரணமே மத்தியில் அமைந்த குஜ்ரால் அரசே. இடதுசாரிகள் ஆதரவோடு நடைபெற்ற அந்த அரசில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை சார்ந்த இந்திரஜித் குப்தா உள்துறை அமைச்சராகவும், சதுராணன் மிஸ்ரா வேளாண் துறை அமைச்சராகவும் பதவி வகித்தனர். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ் கட்சி வெளியில் இருந்து ஆதரவு அளித்தது. ஐந்தாவது ஊதியக் குழு தலைவராக ஓய்வு பெற்ற நீதிபதி ரத்தினவேல் பாண்டியன் இருந்தார்.

அந்த மத்திய ஐந்தாவது ஊதியக் குழு தனது பரிந்துரையை மத்திய அரசிடம் அளித்தது. அதில் 20 சதவீதம் ஊதிய உயர்வு, 30 சதவீதம் ஆட்குறைப்பு பிரதானமானது. இதனை அமுல்படுத்த நிதி அமைச்சகம் வலியுறுத்தியது. ஆனால், மத்திய அரசில் இருந்த இரு இடதுசாரி அமைச்சர்களும், வெளியில் இருந்து ஆதரித்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் இதனை கடுமையான எதிர்த்தன. எனவே, பிரதமர் வேறு வழியின்றி நிதியமைச்சர் இந்திரஜித் குப்தா, சதுராணன் மிஸ்ரா, சீதாராம் எச்சூரி ஆகியோர் கொண்ட குழு அமைக்கப்பட்டது. அக்குழு சிறப்பான சம்பள உயர்வை ஊழியர்களுக்கு அளித்தது. 40 சதவீத ஊதிய உயர்வுடன் ஆட்குறைப்பையும் கைவிட்டது.

## கடந்த 5 ஆண்டின் பகை முடிக்கும் நேரமிது

ஆனால் நாம் போராடி பெற்ற உரிமைகளும், அதனை தக்கவைக்க அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மட்டுமல்லாது தமிழக ஏழை, எளிய, தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மாணவர்களின் மருத்துவ கனவை சிதைத்து நாடு முழுவதும் நீட் தேர்வை கட்டாயமாக்கியதால் ஏற்பட்ட போராட்டங்களும், சிஐடியு டி.கே.ரங்கராஜன் சார்பாக தொடுக்கப்பட்ட மாணவர்களுக்கு ஆதரவான வழக்கும், மருத்துவர்கள் போராட்டக் குழு ஜல்லிக்கட்டை மீட்டெடுக்க தமிழக இளைஞர்கள் திரண்டு நடத்திய போராட்டமும், மவுன புரட்சியால் நடைபெற்ற மெரினா புரட்சியில் தமிழக அரசு கட்டவிழ்த்து விடப்பட்ட காக்கிகளின் தர்பாரும், வன்மத்தை ஏவிய தமிழக அரசும் மத்திய அரசின் பண மதிப்பு இழப்பால் ஏற்பட்ட பாதிப்புகளும், உயிரிழப்பு களும் கண்டுகொள்ளாத தமிழக அரசும், மத்தியில் இடதுசாரிகளின் ஆதரவால் கொண்டு வரப்பட்ட வேலை உறுதியளிப்பு திட்டத்தின் வேலை பறிப்பும் பொது விநியோக திட்டத்தில் பறிக்கப்பட்ட உணவு பொருளக்காக மக்கள் நடத்தும் தொடர் போராட்டங்களும், நாடு முழுவதும் விவசாயிகளின் தற்கொலைகளும், விவசாயிகள் 44 நாட்களுக்கும் மேலாக தலைநகர் தில்லியில் நடத்திய போராட்டமும், கேட்பாரற்ற விவசாயிகளின் நிலையும் டாஸ்மாக் விளைவு களால் தமிழகத்தில் கூடியுள்ள இளம் விதவை களின் கண்ணீரும், எட்டு வழிச் சாலையை எதிர்த்து பொதுமக்களின் போராட்டங்களும், ஸ்டெர்லைட், ஹைட்ரோ கார்பன், மீத்தேன் என்று நீளும் போராட்டங்களின் நியாயங்களும், தமிழகத்தில் 3500 பள்ளிகள் மூடுவதை எதிர்த்த போராட்டங்களும், பொள்ளாச்சியில் 200-க்கும் மேற்பட்ட பள்ளி, கல்லூரி மாணவிகளுக்கு நேர்ந்த வன்கொடுமைகளும், மூடி மறைத்திடும் தமிழக அரசும் திரும்பிப் பார்க்க மறுக்கும் 35 ஆண்டு கால கொத்தடிமை கூலிகளாக பணி யாற்றும் சத்துணவு, அங்கன்வாடி ஊழியர்களின் பணி நிரந்தரமின்மை, நீரின்றி, உணவின்றி, மின்சாரமின்றி ஒடுக்கப்பட்ட செவிலியர்கள் போராட்டமும் கேளா காதினராக மாறியுள்ளன. தமிழக அரசின் இயலாமையையும் எதைப் பற்றியும் கண்டுகொள்ளாத தன்மையையும் உணர்த்தியுள்ளதையும் அனைத்து தரப்பினரின் நியாயமான கோப உணர்ச்சிகளையும் தமிழக அரசு மறந்திடக் கூடாது.

## புதிய பென்சன் திட்டம்

தொடர்ந்து புதிய பென்சன் திட்டத்தை எதிர்த்து 2016-லிருந்து தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் போராடியபோது மறைந்த முதல்வர் ஜெயலலிதா 110 விதியின்கீழ் புதிய பென்சன் திட்டத்தை திரும்பப் பெற சாந்தா ஷீலா நாயர் தலைமையில் நிபுணர் குழு அமைக்கப்பட்டது. தொடர்ந்து டி.எஸ்.ஸ்ரீதர் தலைமையிலும் தொடரப்பட்டது. அதன் அறிக்கையை அரசு

பெற்றும் இதுவரை அதன் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

2017-ல் ஜாக்டோ-ஜியோவின் காலவரையற்ற வேலை நிறுத்தமும், நீதிமன்ற தடையை மீறி நடத்திய போராட்டமும் தலைமைச் செயலாளரை நீதிமன்றத்தில் அளித்த வாக்குறுதிகளும், ஊதிய முரண்பாட்டை களைவதற்காக சித்திக் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கையை அரசு பெற்றும் இதுவரை அதன் மீதும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மதிப்பூதியம், தொகுப்பூதியம் ரத்து சம்பந்தமான எந்த அறிவிப்புகளும் இல்லாத நிலையில் வேறுவழியின்றி ஜாக்டோ-ஜியோவின் வேலை நிறுத்தம், நீதிமன்ற தலையீடு, அதிகாரிகள் மட்டத்தில்கூட அழைத்து பேச முன்வராமல், பேசி தீர்க்க வேண்டிய அமைச்சர்களோ அச்சுறுத்தி அறிக்கைகள் வெளியிடுவது, மறியலில் ஈடுபட்டவர்களில் ஒரு பகுதியினர் மட்டும் கைது செய்து சிறையில் அடைப்பது, சொந்த ஜாமீனில் வெளியில் வந்து குற்றவாளிகளைப் போல் காவல் நிலையத்தில் கையொப்பமிட வைப்பது, பணியில் சேருவதில் அச்சுறுத்துவது, தொலை தூரங்களுக்கு இடமாறுதல் செய்தது, நூற்றுக்கணக்கானோர் தற்காலிக பணி நீக்கம், தற்காலிக பணி நீக்க காலம் இன்று வரை வரன்முறைபடுத்தப்படாதது, ஆயிரக்கணக்கானோர் மீது 17பி-யின் கீழ் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது, இன்று வரை ஒழுங்கு நடவடிக்கை திரும்பப் பெறாததால், பதவி உயர்வும், பணி ஓய்வும் பாதிக்கப்படும் என்ற சிந்தததன செய்யாதது, காவல் துறையை ஏவிவிட்டு நூற்றுக்கணக்கானோர் மீது பொய் வழக்குகள் போடப்பட்டு இன்று வரை நிலுவையில் இருப்பது, கோரிக்கைக்காக போராடும் அரசு ஊழியர்கள், ஆசிரியர் மீது கொலை முயற்சி உள்ளிட்ட வழக்கில் பதிவு செய்தது.

அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் வேலை நிறுத்தத்தை திரும்பப் பெற்றும் வேலை நிறுத்த போராட்டத்தினால் ஏற்பட்ட பாதிப்புகளை அரசு களைய முன்வரவில்லை. பல்வேறுவிதமான பழிவாங்கல்கள் தொடர்கின்றது. இதன் விளைவாக தமிழக அரசின் மீது கோபம் கொந்தளித்துக் கொண்டிருக்கிறது. 2003 எஸ்மா, டெஸ்மாவில் பட்ட ரணத்தால்.

2004ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் அதிமுக 40 தொகுதிகளிலும் தோல்வியை தழுவியது வரலாறு. தோல்வி அடைய செய்ததில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்களும் அவர்களின் குடும்ப ஓட்டுகளும் முக்கிய காரணமாக அமைந்தது.

இதோ நாடாளுமன்ற தேர்தலும், தமிழகத்தில் சட்டமன்ற இடைத்தேர்தலும் கண்முன்னே எதிர்நிற்கின்றது. யார் நம் பக்கம் நின்றார்கள். யார் நம்மை கிள்ளுக்கீரையாக எதிர்கொண்டார்கள் என்பதை எண்ணிப் பார்த்து பகை முடிக்க வேண்டிய இரண்டாம் கட்ட நேரமிது. எதிர்கொள்வோம் ஏப்ரல் 18-ஐ.

- **எஸ்.தமிழ்ச்செல்வி**

## துறைவாரி சங்க நிகழ்வுகள்

தமிழ்நாடு அரசு மோட்டார் வண்டிகள் பராமரிப்பு நிறுவன தொழிலாளர் சங்கத்தின் மாநில செயற்குழு கூட்டம் காஞ்சிபுரத்தில் 30.03.2019 அன்று மாநிலத் தலைவர் எம்.வெங்கடேசன் தலைமையில் நடைபெற்றது. ஜாக்டோ-ஜியோ போராட்டத்தில் சிறை சென்று 48 மணிநேரத்திற்கு மேல் நீதிமன்ற காவலில் இருந்து தற்காலிக பணி நீக்கம் செய்யப்ப்டட போராளிகள் என்.வெங்கடேஷ் (கோவை) டி.சிவம் (கோவை), ப்பி.சுரேஷ் (சேலம்), ப்பி.தங்கராஜ் (ஈரோடு) ஆகியோருக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டு நினைவு பரிசுகள் வழங்கப்பட்டன. அரசு ஊழியர் சங்க மாநில துணைத் தலைவர் என்.குமாரவேல் நிறைவுரை ஆற்றினார். மாநிலச் செயலாளர் ஆர்.வஜ்ஜிரவேலு நன்றி கூறினார்.

Printed and Published by M. ANBARASU on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: M. SUBRAMANIAN . Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com